# நல்லவர் வல்லவர் போதுமானவர்



ப.சாம் ஜெபத்துரை

# நல்லவர், வல்லவர், போதுமானவர்!

(GOOD, ABLE, AND ALL SUFFICIENT)

J. சாம் ஜெயத்துரை

வெளியீடுபவர்

J. சாம் ஜெயத்துரை

50, [illegible] ரோடு

கோடம்பாக்கம், சென்னை - 600 024

முதற் பதிப்பு : ஏப்ரல் 1990
இரண்டாம் பதிப்பு : நவம்பர் 1991

நன்கொடை ரூ. 5/-

வெளியீடு எண் : 157

கிடைக்குமிடம் :

[illegible]
50, [illegible] ரோடு
கோடம்பாக்கம், சென்னை - 600 024.

# அர்ப்பணம்

நல்லவரும், வல்லவரும்,
எனக்குப் போதுமானவருமான
எம்பெருமான் **இயேசு கிறிஸ்துவுக்கே** இந்நூலை
முழு விசுவாசத்தோடு அர்ப்பணிக்கிறேன்.

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | நல்லவர், வல்லவர்! | 5 |
| 2. | தருகிறவர்! | 8 |
| 3. | மனதுருக்கமானவர்! | 11 |
| 4. | காண்கிறவர்! | 14 |
| 5. | போதிக்கிறவர்! | 17 |
| 6. | சமீபமானவர்! | 20 |
| 7. | இரட்சிப்பு சமீபம்! | 23 |
| 8. | வருகை சமீபம்! | 26 |
| 9. | உலகத்தின் முடிவு பரியந்தம்! | 29 |
| 10. | ஆதாயம்! | 32 |
| 11. | அந்த வெள்ளிக் காசுகள்! | 35 |
| 12. | விசுவாசத்தினலே ஆபேல்! | 38 |
| 13. | இளம் பிராயத்தில்! | 41 |
| 14. | யோபுவின் பொறுமை! | 44 |
| 15. | எங்கே சந்திக்கலாம்? | 47 |
| 16. | அடியானின் வீடு! | 50 |
| 17. | என்ன ஜாதி? | 53 |
| 18. | கணக்குப் பாருங்கள்! | 56 |
| 19. | மறுபடியும் வருவார்! | 59 |
| 20. | தேவனுக்கு மகிமையுண்டாவதாக! | 62 |

அத்தியாயம் 1

# நல்லவர், வல்லவர்!

''தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்'' (II கொரி 9:8)

**1. கிருபையை பெருகச் செய்ய வல்லவர்:-**

நமக்கு கொடுக்கப்பட்ட கிருபையிலேயே நாம் திருப்தியடைந்து விடவேண்டுமென்பது தேவனுடைய சித்தமல்ல. நாம் அந்த கிருபையிலே பெருக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தம்.

நாம் எவ்வளவுக்கு எவ்வளவு கர்த்தரை நெருங்கி ஜீவிக்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு கிருபை பெருகும்.

எவ்வளவுக்கு எவ்வளவு தேவனுக்கு முன்பாக தாழ்மையோடு நடந்து கொள்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு கிருபை பெருகும்.

நம்முடைய ஆண்டவர் யார்?

அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார்: அவர் கிருபையை பெருகச் செய்ய வல்லவர்.

வேதம் சொல்லுகிறது, ''எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்'' (II கொரி 9:8).

**2. அவர் விடுவிக்க வல்லவர்:-**

சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ சொன்னார்கள்: ''நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்'' (தானி 3:17 ).

தானியேலின் சாட்சியும் அதுதான். சிங்கங்கள் என்னை சேதப்படுத்தாதபடி சிங்கங்களின் வாய்க்கு என்னை தப்புவிக்க வல்லவராயிருந்தார் என்று சிங்கக் கெபியிலிருந்து முழங்கினார்.

ஆம், தேவனுடைய பிள்ளையே, உனக்கு விரோதமாக எழும்புகிற சத்துருக்கள் எவ்வளவு பெரியவர்களாய் இருந்தாலும் அவர்களுடைய கையினின்று கர்த்தர் உன்னை விடுவிக்க அவர் வல்லமையுள்ளவராய் இருக்கிறார்.

**3. அவர் வாக்குத்தத்தத்தை நிறவேற்ற வல்லவர்:-**

தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்கள் ஒவ்வொன்றையும் ஆபிரகாம் அப்படியே பற்றிப் பிடித்துக் கொண்டார்.

''தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாக நம்பி தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான்'' என்று ரோமர் *4:21*-ல் வாசிக்கிறோம்.

தேவபிள்ளையே, கர்த்தர் உனக்கு ஒரு வாக்கு கொடுத்திருப்பாரென்றால் அதை உறுதியாய் பற்றிப் பிடித்துக்கொள். ஜெபநேரத்தில் அதைச் சொல்லி கர்த்தரிடத்தில் மன்றாடு.

ஒவ்வொரு வாக்குத்தத்தத்தையும் அவர் ஆம் என்றும் ஆமென் என்றும் நிறைவேற்றி தந்தருளுவார்.

**4. தேவன் ஆசீர்வதிக்க வல்லவர்:-**

வேதம் சொல்கிறது: ''நாம் வேண்டிக்கொள்கிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படி, நமக்குச் செய்ய வல்லவர்'' (எபே *3:20*).

நாம் வேண்டிக்கொள்வது கொஞ்சம்தான். நினைப்பது கொஞ்சம்தான். ஆனால் கர்த்தரோ நம்மை ஆசீர்வதிக்க சித்தம் கொண்டிருப்பது மிகமிக அதிகமாக இருக்கிறது.

**5. எல்லாவற்றையும் கீழ்ப்படுத்த வல்லவர்:-**

*''அவர் எல்லாவற்றையும் தமக்கு கீழ்ப்படுத்திக் கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின் படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்'' (பிலிப் 3:21).*

தம்முடைய செயலின்படியே எல்லாவற்றையும் கீழ்ப் படுத்திக் கொள்ளத்தக்கவர். கல்வாரிச் சிலுவையிலே வெற்றி சிறந்து எல்லாவற்றையும் தமக்கு கீழ்ப்படுத்தினார். தானே ஜெயங்கொண்ட தேவக்குமாரனாய் உயிர்த்தெழுந்தார்.

**6. கடைசி வரைக்கும் பாதுகாக்க வல்லவர்:-**

வேதம் சொல்லுகிறது: *''தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயிருக்கிறார்'' (எபி 7:25).*

*''வழுவாதபடி உங்களைக் காக்கவும் தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவர்'' (யூதா 1:34).*

## அத்தியாயம் 2

# தருகிறவர்!

''என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்'' (யோவான் 14:14).

ஜார்ஜ் முல்லருக்கு மிகவும் பிரியமான வசனம் இந்த வசனம்தான்.

இந்த வசனத்தையே தன்னுடைய மூலதனமாக்கி இரண்டாயிரம் பிள்ளைகள் கொண்ட அனாதை இல்லத்தை வெற்றிகரமாக நடத்தி விட்டார்.

இந்த வசனத்தையே அவர் ஆதாரமாக்கி ஆயிரக் கணக்கான ஜெப விண்ணப்பங்களுக்கு கர்த்தரிடத்தி லிருந்து பதில் பெற்றார்.

'ஜெவீரர்' என்று அழைக்கப்பட்டார். விசுவாச வீரர் என்று அழைக்கப்பட்டார்.

அனாதைகளின் தகப்பன் என்று அழைக்கப்பட்டார்.

ஜார்ஜ் முல்லருக்கு ஒரு நண்பர் இருந்தார். அந்த நண் பரின் கடைசி மகள் ஜார்ஜ் முல்லரின் மடியிலே ஒரு நாள் வந்து அமர்ந்து, மாமா, உங்கள் ஜெபங்களுக்கெல்லாம் பதில் கொடுக்கும் தேவன் என் ஜெபத்தையும் கேட் பாரா? என்று மழலைக் குரலிலே கேட்டாள்.

அதைக் கேட்ட ஜார்ஜ் முல்லர் அந்தக் குழந்தையை அன்போடு தட்டிக் கொடுத்து ஆம் அம்மா, இயேசு கிறிஸ்து உனக்கு என்ன கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறாய் என்று கேட்டார்.

அதற்கு சிறுமி, எனக்கு பலவர்ண கம்பளி நூல் வேண்டும். அம்மாவைப் போல கம்பளி துணி செய்ய கற்றுக்கொள்ள வேண்டும் என்றாள்.

முல்லரும் அந்தக் குழந்தையும் உடனடியாக முழங்கால் படியிட்டார்கள்.

முல்லர் அந்தக் குழந்தைக்கு அருமையான சிறிய ஜெபத்தை கற்பித்தார்.

அந்த சிறுமி அந்த ஜெபத்தை தன் மழலை மொழியிலே திரும்பத் திரும்ப சொல்லி ஜெபித்தாள்.

அதன் பின்பு முல்லரின் மடியை விட்டு கீழே குதித்து விளையாட ஓடிவிட்டாள்.

இரண்டு மூன்று நாட்கள் சென்றது. திடீரென்று தபாலிலே அந்தக் குழந்தைக்கு அவள் மாமியிடமிருந்து பலவர்ண கம்பளி நூல் பார்சல் வந்து சேர்ந்தது.

அவள் அடைந்த சந்தோஷத்திற்கு அளவே இல்லை. அவளுடைய உறவினராய் இருந்த ஒரு ஆசிரியை அத்தை இந்தச் சிறுமியின் பெயருக்கு அந்த அழகிய நூலை பார்சலில் அனுப்பியிருந்தார்கள்.

அது அந்தச் சிறுமியினுடைய உள்ளத்தில் ஜெபிப்பதற்கான ஊக்கத்தை அருமையாக ஏற்படுத்தியது.

''ஜெபமே ஜெயம்'' என்ற வார்த்தையை அவள் மறந்து போகவேயில்லை.

என் நாமத்தினுலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் தருவேன் என்று சொல்லுகிற ஆண்டவர், நாம் திட்டவட்டமாய்க் கேட்பதைத் தருவதற்கு கிருபையுள்ளவராய் இருக்கிருர்.

நாம் கர்த்தரிடத்தில் இது எனக்கு வேண்டும் என்று தெளிவாகச் சொல்ல கற்றுக் கொள்ளவேண்டும்.

ஒரு பிறவிக் குருடன் கர்த்தரிடத்தில், தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று கேட்டான்.

ஆனுல், கர்த்தர் அவனைப் பார்த்து, நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்.

காரணம்: அவனுடைய வேண்டுகோள் தெளிவு இல்லாமல் இருந்தது.

பின்பு அவன் மிகவும் திட்டமாய் நான் பார்வையடைய வேண்டும் என்று சொன்னபோது, கர்த்தர் அவன் பார்வையடையும்படி அவனுக்கு இரக்கம் செய்தார்.

தேவபிள்ளையே, உன்னுடைய ஜெப அறைக்குள் நீ திட்டவட்டமான ஜெப வேண்டுகோளோடு பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசத்தோடு உள்ளே செல்.

ஜெபிக்க ஆரம்பிப்பதற்கு முன்பாகவே நீ என்ன பெறப் போகிறாய் என்பதை உன் மனக்கண்கள் காணட்டும்!

அன்னாள் தேவனுடைய ஆலயத்தை நோக்கி ஓடும்போதே அவளுடைய மனக்கண்களிலே ஒரு தரிசனம் இருந்தது.

அவள் ஒரு குழந்தையைக் கண்டாள். அந்த குழந்தையை தேவனுடைய பணி செய்கிறவளாய்க் கண்டாள்.

ஆகவே, அவள் கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசித்தபோது தைரியமாய் பொருத்தனை செய்து கர்த்தருடைய பணிக்காய் அவனை அர்ப்பணித்தாள்.

தேவபிள்ளையே, திட்டமும் தெளிவுமாய் ஜெபி. பதிலைப் பெற்றுக்கொள்.

''ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும் ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்'' (எபி 4:16).

## அத்தியாயம் 3

# மனதுருக்கமானவர்!

''இயேசு அவர்கள் மேல் மனதுருகி, அநேக காரியங்களை அவர்களுக்கு உபதேசிக்கத் தொடங்கினார்''

(மாற் 6:34)

சிலருடைய உள்ளம் கல் நெஞ்சமாய் இருக்கிறது. அவர்கள் மனந்திறந்து பேசுவதில்லை. மற்றவர்களுடைய துயரங்களைக் கண்டும் மனதிரங்குவதுமில்லை.

பார்வோனுடைய நெஞ்சு கடின இருதயம் உடையதாய் இருந்தது. கர்த்தர் எத்தனையோ அற்புதங்களை அவனுக்கு முன்பாக செய்தார். ஆனால் ஒவ்வொருமுறையும் அவன் தன் இருதயத்தை கடினப்படுத்தினான்.

இன்னும் சிலருடைய நெஞ்சு ஈவு இரக்கம் இல்லாததாக இருக்கிறது. கொடிய கொலை பாதகங்களை மனித உணர்வு இல்லாமல் செய்து விடுகிறார்கள்.

நாம் வாழுகிற இந்த கொடிய காலங்களில் நம்மைச் சூழ உள்ள மனுஷரை நோக்கிப் பார்க்கும்போது அவர்களுக்கு அன்போ, தயவோ, தாட்சணியமோ, இரக்கமோ இருப்பதாக தெரியவில்லை.

சுயநலவாதிகளாய் தங்களுக்குரியவைகளையே எண்ணிப் பார்க்கிறார்கள்.

அதே நேரத்தில் காட்டு மரங்களுக்குள்ளே கிச்சிலி மரம் இருப்பது போல இயேசு கிறிஸ்துவை நாம் நோக்கிப் பார்க்கிறோம்.

அவருடைய அன்பும் மனதுருக்கமும் நம்முடைய உள்ளத்தையெல்லாம் கவர்ந்திழுக்கிறது. வேதத்தில் திரும்பத் திரும்ப இயேசு கிறிஸ்துவினுடைய மனதுருக்கத்தைக் குறித்து நாம் வாசிக்கலாம்.

வேதம் சொல்கிறது, ''இயேசு கரையில் வந்து, அநேக ஜனங்களைக் கண்டு, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலிருந்தபடியால், அவர்கள் மேல் மனதுருகி அநேக காரியங்களை அவர்களுக்கு உபதேசிக்கத் தொடங்கினார்'' (மாற்கு 6:34).

ஒரு முறை இரண்டு குருடர்கள் தாவீதின் குமாரனே எங்களுக்கு இரங்கும் என்று இயேசுகிறிஸ்துவை அழைத்த போது அவருடைய உள்ளம் உருகினது.

நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று இருக்கிறீர்கள் என்று மனதுருகி கேட்டார். மாத்திரமல்ல, அவர்களுடைய கண்களைத் தொட்டு அவர்களை பார்வை யடையும்படி செய்தார் (மத் 20:34).

அவருடைய மனதுருக்கத்தைத் தொடர்ந்து அற்புதம் நிகழ்ந்தது.

ஒரு முறை ஒரு குஷ்டரோகி அவருக்கு முன்பாக ஓடி வந்தான், முழங்காற்படியிட்டான்.

உமக்கு சித்தமானால் என்னை சுத்தமாக்க உம்மால் ஆகும் என்று வேண்டிக் கொண்டான்.

வேதம் சொல்லுகிறது, ''இயேசு மனதுருகி கையை நீட்டி, அவனைத் தொட்டு; எனக்குச் சித்தமுண்டு, சுத்த மாகு என்றார்'' (மாற் 1:41).

பாருங்கள் அவர் வெறும் ஆறுதல் மொழிகளை மாத்தி ரம் பேசி சும்மா இருந்து விடவில்லை. மனதுருக்கத்தோடு அவர் குஷ்டரோகியை கூசாமல் தொட்டார்; குணமாக் கினார்.

சிலர் மனதுருகுவதைப் போல பசப்பு வார்த்தைகளி னால் பேசுவார்கள். ஆனால் உண்மையிலேயே உதவி செய்ய மாட்டார்கள்.

ஆனால் இயேசு கிறிஸ்து அப்படி அல்ல. அவர் எப்பொழுதெல்லாம் மனதுருகினாரோ அப்பொழுதெல்லாம் அற்புதங்களை நிகழ்த்தினார்.

ஒருமுறை மரித்துப்போன வாலிபனுடைய பிரேத ஊர்வலம் நாயீன் என்ற ஊருக்கு வெளியே வந்தது. அவனுடைய விதவைத் தாய் அவனுடைய மரணத்தை தாங்க முடியாமல் கதறி அழுதாள்.

ஏற்கெனவே கணவனை இழந்த அவளுக்கு இருந்தது அந்த ஒரே மகன்தான். அவளுடைய ஒரே நம்பிக்கையின் நட்சத்திரமாயிருந்த மகனும் மரித்து விட்டான். அவள் எங்கே போய் ஆறுதல் தேடுவாள்?

அந்த தாயின் கண்ணீர் கிறிஸ்துவின் இருதயத்தை உருக்கினது. அந்த பாடையின் அருகிலே வந்து வாலிபனே எழுந்திரு என்று சொல்லி அவனை உயிரோடு எழுப்பிக் கொடுத்தார்.

தேவபிள்ளையே, அந்த தேவன் இன்றைக்கும் உன்மேல் மனதிரங்குகிறார்.

உன்னுடைய பிரச்சனையோ, போராட்டமோ எதுவாக இருந்தாலும் மனதிரக்கத்தின் தேவனாகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் உனக்கு விடுதலை உண்டு, ஆறுதல் உண்டு.

அவரை நோக்கிப் பார்ப்பாயா?

''இயேசு வந்து, திரளான ஜனங்களைக் கண்டு, அவர்கள்மேல் மனதுருகி, அவர்களில் வியாதியஸ்தர்களாயிருந்தவர்களைச் சொஸ்தமாக்கினார்'' (மத் 14:14).

# காண்கிறவர்!

‘‘தன்னோடே பேசின கர்த்தருக்கு நீர் என்னைக் காண்கிற தேவன் என்று பேரிட்டாள்’’ (ஆதி 16:13).

பிரான்ஸ் தேசத்திலே கட்டப்பட்ட ஒரு பெரிய தேவாலயத்திலே கானாவூரிலே கர்த்தர் செய்த அற்புதத்தை சித்தரிக்கும் காட்சி ஒன்றை பழிங்கு கற்களிலே செதுக்கும்படி சிற்பி ஒருவரிடம் ஒப்படைத்தார்கள்.

அந்த சிற்பி இரவும் பகலும் அந்த திருமண காட்சியையும் கற்ஜாடிகளையும் கல்லிலே செதுக்கினான்.

அந்த காட்சிகளெல்லாம் கல்லிலே செதுக்கப்பட்டதை அந்த சிற்பியின் மகன் கவனித்துக்கொண்டே இருந்தான்.

‘‘அப்பா, இந்த ஆறு கற்ஜாடிகளும் தேவாலயத்தின் இருபது அடி உயரத்தில் அமைக்கப்படுகிறது. அவ்வளவு உயரத்தில் இந்த கற் ஜாடிகளை ஜனங்கள் யார் கூர்ந்து கவனிக்கப் போகிறார்கள். நீங்களோ மிக நுட்பமாக அதிகமான நேரம் செலவளித்து இந்த கற்ஜாடிகளை செதுக்கிக்கொண்டு இருக்கிறீர்களே, சாதாரணமாக செதுக்கியிருந்தால் போதுமே’’ என்று சொன்னான்.

அதற்கு அவனுடைய தகப்பன் மகனை தட்டிக்கொடுத்து, ‘‘மகனே, ஜனங்கள் பார்க்கிறார்களோ பார்க்கவில்லையோ, எனக்கு காண்டிராக்ட் வேலையை தந்தவர்கள் கவனிக்கிறார்களோ இல்லையோ, ஆனால் என்னை காண்கிற தேவன் அதை காண்கிறார் என்று அறிவேன். ஆகவே நான் எதைச்செய்தாலும் கர்த்தருக்கென்று மனப்பூர்வமாக செய்கிறேன்’’ என்று சொன்னான்.

கர்த்தருக்கு, ''நீர் என்னை காண்கிற தேவன்'' என்று பெயரை சூட்டினது ஆகார்தான்.

அவள் ஒரு அடிமை பெண், ஒரு வீட்டின் வேலைக்காரி.

ஒருவேளை அவளுடைய உள்ளத்தில் கர்த்தருடைய கண்கள் ஆபிரகாமை காணக்கூடும்; கர்த்தருடைய கண் சாராளின் மேல் நோக்கமாய் இருக்கக்கூடும். ஆனால் அவர் என்னை காண்பாரோ என்று எண்ணி இருந்திருக்கக்கூடும்.

ஆனால், கர்த்தருடைய கண் அவளையும் கண்டு கொண்டே இருந்ததை அவள் வனாந்தரத்தில்தான் அறிந்தாள்.

கர்த்தர் அவளுடைய சிறுமையை கண்டார். அவளுடைய அங்கலாய்ப்பைக் கண்டார். அவளோடுகூட பேசி சாராளிடத்திற்கு திருப்பி அனுப்பி வைத்தார்.

அவள் மிகுந்த சந்தோஷத்தோடு நீர் என்னை காண்கிற தேவன் என்று சொல்லி கர்த்தருக்கு பெயரிட்டாள்.

தேவபிள்ளையே, கர்த்தர் உன்னை காண்கிறவராய் இருக்கிறார்.

கர்த்தர் என்னை காண்கிற தேவன் என்கிற தரிசனம் உன் கண்களிலே இருக்குமென்றால் நீ வழி விலகி செல்ல மாட்டாய். உன்னால் பாவம் செய்யவும் முடியாது.

ஒரு வீட்டில் ஒரு சகோதரன் ''நீர் என்னை காண்கிற தேவன்'' என்கிற வசனத்தை ஒரு பெரிய போர்டு ஒன்றில் வைத்திருந்தார்.

வீட்டிலிருந்து எந்த பக்கம் பார்த்தாலும் அந்த போர்டு அவருடைய கண்களுக்கு முன்பாக காட்சியளித்தது. ஒவ்வொரு முறை அவர் அந்த போர்டிலுள்ள வசனத்தை பார்க்கும்போதெல்லாம் அங்கேயிருந்து கர்த்தருடைய கண்கள் அவரையே நோக்கிப் பார்ப்பதுபோல இருக்கும்.

கர்த்தருடைய கண்கள் தன்னை நோக்கிப் பார்க்கிறதினாலே தனக்கு ஆசீர்வாதமும் தயவும் கிருபையும் கிடைக்கிறதாக எண்ணி அவர் கர்த்தரை ஸ்தோத்தரித்தார்.

தேவபிள்ளையே, கர்த்தர் உன்னை காண்கிறார்.

உன்னுடைய சிறையிருப்பை காண்கிறார்.

நீ ஒடுக்கப்படுகிறதை காண்கிறார்.

அநேக வேதனையை உனக்குள்ளே அடக்கி வைத்துக்கொண்டிருக்கிறதை காண்கிற தேவன் உன்னுடைய எல்லாப் பிரச்சனைகளிலிருந்தும் உனக்கு விடுதலையைத்தரவும் உன்னை ஆசீர்வதித்து உயர்த்தவும் வல்லமையுள்ளவராய் இருக்கிறார்.

''தம்மைப் பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது'' (II நாளா 16:9).

# போதிக்கிறவர்!

"நான் உனக்குப் போதித்து நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்" (சங் 32:8).

எத்தனை அருமையான வாக்குத்தத்தம் இது!

கர்த்தர் நான்கு காரியங்களை சொல்லுகிறார். நான் உனக்கு போதிப்பேன், வழியை காட்டுவேன், என் கண்ணை உன்மேல் வைப்பேன், உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.

நம்முடைய ஆண்டவர் நமக்கு போதிக்கிறவர். அந்த போதனை நித்தியமான போதனை. என்றென்றுமாய் நம்மை போதிக்கிற போதனை.

அந்த போதனையினால் உண்மையில் நாம் ஜெயம் கொண்டவர்களாய் வாழுகிறோம். நித்தியத்தில் பரலோக ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்கிறோம்.

ஒரு மனுஷனுக்கு சிறுவயதில் பெற்றோர் போதிக்கிறார்கள்.

பள்ளிக் கூடங்கள், கலாச்சாலைகள் போதிக்கின்றன.

இனத்தவர்கள், நண்பர்கள் போதிக்கிறார்கள்.

வாழ்க்கையின் அனுபவங்களும் சரித்திரங்களும் போதிக்கின்றன.

இந்த போதனைகள் ஒருசில நிமிடங்களில் முடிந்து விடு கிறதல்ல. இந்த போதனைகள் பல ஆண்டுகள் தொடர் கின்றன.

இந்த போதனையின் பலனை மிக நீண்ட காலங்கள் மனிதன் அனுபவிக்கிறான்.

நாம் எவ்வளவுதான் போதிக்கப்பட்டாலும் கடைசி வரையிலும் நாம் தேவனால் போதிக்கப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டியது மிகவும் அவசியம்!

தேவன் நம்மோடுகூட எப்படி இடைப்படுகிறார்? எப்படி போதிக்கிறார்? சற்று சிந்தித்துப் பாருங்கள்.

அவர் வேத வசனங்களின் மூலமாக நம்மோடுகூட பேசுகிறார்.

தேவ ஊழியர்கள் மூலமாக நம்மோடுகூட பேசுகிறார்.

பரிசுத்த ஆவியானவரின் மெல்லிய குரலின் மூலமாக நம்மோடுகூட பேசுகிறார்.

சிறு சாமுவேலை போல நம்மை தாழ்த்தி, ''கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன்'' என்று சொல்லும் போது கர்த்தர் அருமையாக நம்மை போதித்து வழி நடத்துகிறார்.

நாம் எப்பொழுதும் கர்த்தருடைய வார்த்தைகளுக்காக ஆவலுடனும் ஏக்கத்துடனும் காத்திருக்கவேண்டும்.

''ஆண்டவரே, உம்முடைய வழியை எனக்கு காட்டும் அப்பா. என்னுடைய பாதைகளில் உம்முடைய வெளிச்சம் வீசட்டும். நான் நடக்க வேண்டிய வழியை எனக்கு சொல்லித் தாரும்'' என்று கேட்கும்போது நிச்சயமாகவே கர்த்தர் நமக்கு தம்முடைய வழியை தெரிவிப்பார்.

''சாந்த குணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்த குணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்'' என்று சங்கீதம் 25:9-ல் நாம் வாசிக்கிறோமே.

ஏசாயா தன்னுடைய அனுபவத்தை நம்மோடுகூட மனந்திறந்து எழுதுகிறார். ஏசாயா 50:4-யை வாசித்துப் பாருங்கள்.

''இளைப்படைந்தவனுக்கு சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்ல நான் அறியும்படிக்கு, கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் கல்விமானின் நாவைத் தந்தருளினார்; காலை தோறும் என்னை எழுப்புகிறார்; கற்றுக்கொள்ளுகிறவர் களைப் போல, நான் கேட்கும்படி என் செவியை கவனிக்கச் செய்கிறார்'' (*ஏசா 50:4*).

காலைதோறும் என்னை எழுப்புகிறார்; எனக்கு போதிக் கிறார். அதுதான் ஏசாயாவின் அனுபவ சாட்சி. மட்டு மல்ல, ஒவ்வொரு பரிசுத்தவான்களின் சாட்சியும் இதுதான்.

அதிகாலையில் அவரை தேடுகிறவர்கள் கண்டடை வார்கள். அவருடைய போதனைகளையும் ஆலோசனைகளை யும் பெற்றுக் கொள்கிறார்கள்.

காலைதோறும் பகலின் குளிர்ச்சியான வேளையில் கர்த்தர் நம்முடைய மத்தியில் இறங்கி உலாவுகிறார். நம் மோடுகூட சஞ்சரிக்கிறார்.

இயேசு கிறிஸ்துவினுடைய அனுபவம் அதுவாகவே இருந்தது. அவர் ஒவ்வொரு அதிகாலை வேளையிலும் அவாந்தரமான இடத்திற்கு சென்று பிதாவினுடைய ஆலோசனைக்காக காத்திருந்தார்.

தேவபிள்ளையே, இந்த பயங்கரமான உலகத்தில் நீ ஜெய ஜீவியம் செய்ய வேண்டுமென்றால் கர்த்தருடைய ஆலோசனைகளை ஒவ்வொருநாளும் நீ கேட்க வேண்டும்.

''எனக்கு ஆலோசனை தந்த கர்த்தரைத் துதிப்பேன்; இராக்காலங்களிலும் என் உள்ளிந்திரியங்கள் என்னை உணர்த்தும்'' (*சங் 16:7*).

## அத்தியாயம் 6

# சமீபமானவர்!

"நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுது கொள்ளுகிறபோதெல்லாம் அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறதுபோல, தேவனை இவ்வளவு சமீபமாய்ப் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது?" (உபா 4:7).

தேவன் நமக்குச் சமீபமாகவே இருக்கிறார். அது எத்தனை பெரிய பாக்கியம்! அது எத்தனை பெரிய பெலன்! அது எத்தனை பெரிய சந்தோஷம்!

ஆம், தேவபிள்ளையே, கர்த்தர் உனக்கு சமீபமாகவே இருக்கிறார்.

பெற்றோர் தங்களுடைய பிள்ளைகள் தங்களுக்கு சமீபமாய் இருக்கவேண்டும் என்று எண்ணுகிறார்கள்.

நாம் நம்முடைய வியாதி படுக்கையின் நேரங்களிலெல்லாம்; நம்முடைய தாய் அல்லது தகப்பன் நம்முடைய படுக்கையின் அருகிலே உட்கார்ந்திருக்க வேண்டும் என்று விரும்புகிறோம்.

ஆறுதலற்ற வேளைகளில், துயர நேரங்களில் நமக்கு அருமையானவர்கள் நமக்கு சமீபமாய் இருக்கும்போது நம் உள்ளம் மகிழ்ந்து களிகூருகிறது; நாம் திடன் கொள்ளுகிறோம்.

மோசே பக்தன் தன் அனுபவத்திலிருந்து எழுதுகிறார்: "நாம் கர்த்தரை தொழுது கொள்ளும்போது அவர் நமக்குச் சமீபமாய் இருக்கிறார்!" என்பதே அந்த அனுபவம்.

ஆம், நாம் தொழுதுகொள்ளும்போது, நம் ஆண்டவர் நமக்குச் சமீபமாய் கடந்து வருகிறார்.

நம்முடைய தொழுகையில் மனம் மகிழும்படி, நம்முடைய துதியில் வாசம்பண்ணும்படி, நாம் வேண்டிக்

கொள்ளுகிறதைத் தந்தருளும்படி அவர் நமக்கு மிகவும் அருகில் கடந்து வருகிறார்!

இதே உண்மையை சங்கீதக்காரனும் தன் அனுபவத்திலிருந்து எழுதுகிறதைப் பார்க்கிறோம்: ''தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார்'' (சங் 145:18).

சில நாட்களுக்கு முன்பு ஸ்வீடன் தேசத்திலிருந்து, அன்றன்றுள்ள அப்பத்தின் வாசகரான ஒரு சகோதரி டெலிபோன் செய்து தன்னுடைய பிரச்சனைகளையெல்லாம் என்னிடத்திலே சொன்னார்கள்.

அவர்கள் பேசுகிறது மிக அருகிலே, மிக சமீபமாய் உட்கார்ந்து நேரடியாக என்னோடுகூட பேசுகிறதைப் போல இருந்தது.

நான் பேசுகிறது உடனே அவர்களுக்குக் கேட்கிறது, அவர்கள் பதில் கொடுக்கிறார்கள். அவர்கள் பேசுகிறது உடனே எனக்குக் கேட்கிறது, நான் அவர்களுக்குப் பதில் கொடுக்கிறேன்.

டெலிபோன் ஒயரும், மின்சாரமும் எத்தனையோ மைல்களுக்கு அப்பால் இருக்கிற அவர்களை மிகவும் சமீபத்தில் கொண்டுவந்துவிட்டது!

அந்த டெலிபோன் தொடர்பைப் பார்க்கிலும் தேவனோடு நாம் வைத்திருக்கிற ஜெபத் தொடர்பு இன்னும் நெருக்கமானது.

தேவனை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் உண்மையாகவே, மெய்யாகவே அவர் சமீபமாகவே இருக்கிறார்.

ஆகவேதான் வேதம் சொல்லுகிறது, ''என்னை நோக்கிக் கூப்பிடு. அப்பொழுது நான் உனக்கு உத்தரவு

கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை அறிவிப்பேன்'' (எரே 33:3).

தேவபிள்ளையே, தேவன் வானுதி வானங்களுக்கு மேலாய், நட்சத்திரங்களுக்கு மேலாய், மிக தூரமான இடத்தில் இருக்கிறார் என்று எண்ணாதே.

நீ ஜெபிக்க முழங்கால்படியிடும்போது அவர் உனக்கு சமீபமாகவே இருக்கிறார் என்பதை உணர்ந்து ஜெபிப்பாயாக.

நம்முடைய தேவன் ஆவியாய் இருக்கிறபடியினால் ஒருவேளை மாம்ச கண்களினால் காணக்கூடாமல் இருக்கலாம். வேதவாக்கியங்களின்படி அவர் நமக்கு சமீபமாகவே இருந்து உன்னை ஆசீர்வதிப்பார்.

அதிலும் கண்ணீரோடும் பாரத்தோடும் நீ தேவ சமுகத்தில் வரும்போது, நொறுங்குண்ட நருங்குண்ட இருதயத்தோடு கர்த்தரண்டை வரும்போது அவர் இன்னும் உனக்குச் சமீபமாய் அருகில் வந்து உன்னுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார்.

வேதம் சொல்லுகிறது, ''நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்'' (சங் 34:18).

''கர்த்தரை கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்; அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்'' (ஏசா 55:6).

அத்தியாயம் 7

# இரட்சிப்பு சமீபம்...!

''இரட்சிப்பு நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது''
(ரோமர் 13:11).

இரட்சகர் நமக்கு சமீபமாயிருக்கிறபடியினால் இரட்சிப்பு நமக்கு சமீபமாகவே இருக்கிறது.

இன்றைக்கு கிருபையின் வாசல் திறக்கப்பட்டிருக்கிறபடியினால், நாம் இரட்சகரண்டை ஓடிப்போய் நம்முடைய பாவங்களையெல்லாம் அறிக்கைசெய்து விட்டுவிட்டு, மெய் மனஸ்தாபத்தோடு இரட்சகரண்டை திரும்புவோம் என்றால், இரட்சிப்பை நாம் உடனே எளிதாக இலவசமாக பெற்றுக்கொள்வோம்.

இன்றைக்கு சமீபமாய் இருக்கிற இந்த இரட்சிப்பு ஒருவேளை நாம் காலதாமதம் செய்தால் மிக தூரமாய் போய்விடக் கூடும்.

அன்றைக்கு ஐசுவரியவான் தன்னுடைய கிருபையின் நாட்களையெல்லாம் அசட்டை செய்தான். சம்பூரணமாய்ச் சாப்பிட்டு, இரத்தாம்பரங்களை உடுத்துவதே அவனுடைய வாழ்க்கையின் நோக்கமாயிருந்தது.

கிறிஸ்துவையும், இரட்சிப்பையும் அலட்சியம் செய்ததினாலே முடிவிலே அவன் நரகக் கடலில் பங்கடையவேண்டியதாயிற்று. இரட்சிப்பு அவனுக்கு தூரமாய்ப் போய்விட்டது.

பரிசுத்தவான்கள் அவனுக்கு தூரமானார்கள். கர்த்தருடைய கிருபை தூரமானது.

அவனுடைய நாவை குளிர வைக்க ஒரு சொட்டு தண்ணீர்கூட கிடைக்க முடியாத நிலைமையில் என்

றென்றும் தூரமாய்ப் போய்விட்டான். அவன் இரட்சிப்பைக் குறித்து இனி எங்கே நினைத்துப் பார்க்கமுடியும்?

நோவா பேழையினுல் வரும் இரட்சிப்பைக் குறித்து நூற்றியிருபது வருடம் பிரசங்கித்தான். அந்த நூற்றியிருபது வருடமும் இரட்சிப்பு சமீபமாகத்தான் இருந்தது.

ஆனுல், திடீரென்று அந்த பேழையின் வாசல்கள் மூடப்பட்டபோதோ, இரட்சிப்பு உலக ஜனங்களுக்கு தூரமாயிற்று.

மழை பொழிந்தது; வெள்ளம் அதிகமாயிற்று. ஜனங்கள் வெள்ளத்தால் மடிய வேண்டிய நிலைமை வந்தது.

அவர்கள் நோவாவின் பேழையை நோக்கி வந்து நோவாவிடம் கெஞ்சியிருந்திருக்கக்கூடும். கதவை ஓங்கி ஓங்கி தட்டியிருந்திருக்கக் கூடும். இரட்சிப்பு அவர்களுக்கு தூரமானது.

தேவபிள்ளையே, எப்பொழுது கிறிஸ்துவின் வருகை இருக்குமென்று தெரியாது. எப்பொழுது ஒரு மனுஷனுடைய முடிவு இருக்குமென்றும் தெரியாது.

இன்றைக்கு இரட்சிப்பு சமீபமாயிருக்கிற இந்த வேளையில்தானே இரட்சிப்பை பெற்று அனுபவிப்போமாக.

அப்போஸ்தலனுகிய பவுல் இதைக் குறித்து, "இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானுல், தண்டனைக்கு எப்படி தப்புவித்துக் கொள்வோம்?" என்று கேட்கிறுர்.

தேவபிள்ளையே, இரட்சிப்பு சமீபமாயிருககிற இந்த வேளையில்தானே இரட்சகரை ஏற்றுக்கொள்வாயாக.

இரட்சிப்பை பெற்று நாம் இரட்சகரண்டை சமீபமாவதற்காகவே இயேசுகிறிஸ்து தம்முடைய தூய்மையான இரத்தத்தை சிலுவையிலே சிந்தினுர். வேதம்

சொல்லுகிறது: முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள் (எபே 2:13).

தேவபிள்ளையே, இதோ, கர்த்தர் உன்னுடைய ஆத்தும இரட்சிப்பின் மேல் கரிசனையுள்ளவராய் வாசலிலே நின்று கதவை தட்டிக்கொண்டிருக்கிறார்.

ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான் என்று சொல்லுகிறார்.

உன்னுடைய இருதய கதவை அவருக்கு திறப்பாயா? இரட்சகர் உன் வாழ்க்கையில் வர இடம் கொடுப்பாயா? அப்பொழுது நீ என்றென்றைக்கும் ஆசீர்வதிக்கப்படுவாய்.

ஆம், இரட்சிப்பு சமீபமாய் இருக்கிறது; இரட்சகர் சமீபமாயிருக்கிறார். ஏற்றுக்கொண்டு இரட்சிப்பின் சந்தோஷத்தால் நிரப்பப்படுவாயாக.

''நம்முடைய தேசத்தில் மகிமை வாசமாயிருக்கும்படி, அவருடைய இரட்சிப்பு அவருக்குப் பயந்தவர்களுக்குச் சமீபமாயிருக்கிறது'' (சங் 85:9).

## அத்தியாயம் 8

# வருகை சமீபம்!

"கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறது" (யாக் 5:8).

இந்த கிருபையின் நாட்களில் கிறிஸ்து நமக்கு சமீபமாயிருக்கிறார். கிறிஸ்து தரும் இரட்சிப்பும் சமீபமாயிருக்கிறது.

அதே நேரத்தில் கர்த்தருடைய வருகையும் மிக மிக சமீபமாயிருக்கிறது என்பதை நாம் மறந்து போய் விடக்கூடாது.

கிறிஸ்துவினுடைய வருகையைக் குறித்து எல்லா தீர்க்கதரிசனங்களும் இன்றைக்கு நிறைவேறி விட்டன. வருகையைக் குறித்த அடையாளங்களை உலகமெங்கும் நாம் காண்கிறோம்.

தேசத்தில் கர்த்தர் கட்டளையிட்ட எழுப்புதலின் பின் மாரியானது கிறிஸ்துவின் வருகை நமக்கு சமீபமாயிற்று என்பதை உணர்த்துகிறது.

உலக ஜனங்களும் கூட உலகம் தன் முடிவை தீவிரிக்கிறதை அறிவித்திருக்கிறார்கள்.

நாம் வாழுகிற இந்த உலகத்தைப் போல நாற்பதாயிரம் உலகங்கள் என்றாலும் அவற்றையெல்லாம் அழித்து தீர்க்கும்படி வல்லரசுகள் ஆயுதங்களை செய்து வைத்திருக்கிறார்கள்.

இனி ஒரு தலைமுறை பூமியில் எழும்பும் என்று நம்பிக்கையில்லாத நிலைமையில் நாம் இருக்கிறோம். நம்முடைய தலைமுறைதான் கடைசி தலைமுறையாகும். நம்முடைய கண்களே கிறிஸ்துவின் வருகையிலே அவரைச் சந்திக்கும்.

அப்போஸ்தலனுகிய பேதுரு அதைக் குறித்து எழுதும் போது: ''எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்'' என்று சொல்லி எச்சரிக்கிருர் (I பேதுரு 4:7).

புதிய ஏற்பாட்டிலே மாத்திரம் முன்னூறு இடங்களுக்கு மேலான இடங்களில் கிறிஸ்துவின் வருகையைப் பற்றிய எச்சரிப்புகள் காணப்படுகின்றன.

கர்த்தருடைய வருகை சமீபம்; கர்த்தருடைய நாள் சமீபம்; சூளையைப் போல எரிகிற நாட்கள் வரும் என்றெல்லாம் வேதம் திரும்பத் திரும்ப எச்சரிக்கிறது.

ஒரு முறை சீஷர்கள் இயேசு கிறிஸ்துவினிடத்தில் தனியாக வந்து உலகத்தின் முடிவுக்கும், உம்முடைய வருகைக்கும் அடையாளம் என்ன? அதை எங்களுக்குச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

இயேசு கிறிஸ்து பல அடையாளங்களை சொன்னுர். அவற்றில் ஒன்று, ''அத்தி மரத்தினுல் ஒரு உவமையைக் கற்றுக் கொள்ளுங்கள்; அதிலே இளங்கிளை தோன்றி துளிர் விடும்போது, வசந்த காலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள். அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும் போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிருர் என்று அறியுங்கள்'' (மத் *24:32, 33*).

அத்திமரம் என்பது இஸ்ரவேலரின் அரசியல் வாழ்க்கையைக் குறிக்கிறது. அத்தி மரம் துளிர் விடுவதைப் போன்று இஸ்ரவேலர் உலகத்தின் பல பகுதிகளிலே நம்பிக்கையில்லாமல் சிதறிக் கிடந்தவர்கள் துளிர் விட்டு தங்களுடைய தேசத்தில் வந்து ஒன்ருகக் கூடினுர்கள்.

பல தேசங்களிலிருந்து வந்த யூதர்கள் இன்றைக்கு பெலங்கொண்டு பெரிய தேசமாய்க் காலூன்றி நிற்கிருர்கள். சமீபத்தில் ரஷ்யாவிலிருந்தும், பெருங்கூட்டம் யூதர்

கள் விடுதலையாகி தங்கள் தேசத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள்.

கிறிஸ்து சொன்ன எல்லா வருகையின் அடையாளங்களும் நிறைவேறி விட்டது. தேவனுடைய வருகை சமீபமாகி விட்டது.

தேவனுடைய பிள்ளையே, சற்று சிந்தித்துப் பார். கர்த்தருடைய வருகையைக் குறித்து எவ்வளவோ கேள்விப்பட்டும், அறிந்தும் பிரசங்கங்களின் மூலமாய் உணர்த்தப்பட்டும் அவருடைய வருகையிலே காணப்படாமல் கைவிடப்படுவது என்பது எவ்வளவு வேதனையானது?

இதுவரை நீ கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தமாக இராமலிருந்தால் இன்றைக்கே உன்னைத் தாழ்த்தி ஒப்புக்கொடுத்து ஆயத்தப்படுவாயாக. ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக (வெளி 22:17).

தேவபிள்ளையே, கர்த்தருடைய வருகைக்கு நீ ஆயத்தமாவது மாத்திரமல்ல, ஒரு கூட்டம் உத்தமமான ஜனத்தைக் கிறிஸ்துவினுடைய மகிமையான வருகைக்கு ஆயத்தம் பண்ணும்படி உன்னை ஒப்புக்கொடுப்பாயா?

''இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர்: மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும்'' (வெளி 22:20).

## அத்தியாயம் 9

# உலகத்தின் முடிவு பரியந்தமும்!

''இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களி லும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்''

(மத் 28:20).

இந்த வாக்குத்தத்த வசனங்களை நீங்கள் பல ஆயிரம் முறை கேட்டிருக்கலாம். ஏராளமான பிரசங்கங்களிலும், தியானங்களிலும் கேட்டிருக்கலாம். ஆனால், இந்த வேளையில் மீண்டும் அந்த வார்த்தையை சிந்தியுங்கள்.

அந்த வார்த்தையை சிந்திப்பதற்கு முன்பதாக அதை சொல்லுகிறவரின் ஆள்தத்துவத்தை தியானித்துப் பாருங் கள். அவர் யார்?

அவரே நம்முடைய பிதா, பரம தகப்பனானவர். அவர் அன்போடு நம்முடைய கைகளை பிடித்து உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்று சொல்லுகிறார்.

இது எத்தனை ஆசீர்வாதமானது! அன்புள்ள தகப்ப னோடு வழி நடப்பது எத்தனை பாக்கியமானது!!

அதை சொல்லுகிறவர் நம்முடைய தகப்பனாக மாத்திரமல்ல, நம்முடைய நண்பராகவும் இருக்கிறார். உத்தம சிநேகிதர் அவர். பிதாவினிடத்தில் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் நமக்கு அறிவிக்கிற தோழன் அவர்.

ஒரு சிநேகிதன் தன்னுடைய சிநேகிதனோடு மனந் திறந்து பேசுவான். இருதயத்தின் இரகசியங்களையெல் லாம் அவனிடத்தில் பகிர்ந்துகொள்ளுவான்.

உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நம் மோடுகூட இருக்கிற கிறிஸ்துவாகிய சிநேகிதர் தம்மு

டைய பரம இரகசியங்களையெல்லாம் நம்மோடுகூட பகிர்ந்துகொள்ள விரும்புகிறார்.

மட்டுமல்ல, அவர் நம்முடைய ஆத்தும நேசர்; ஆத்தும மணவாளன். வனாந்தரமான இந்த உலகத்திலே நாம் சார்ந்துகொள்ளக்கூடிய இனிய நேசர் அவர்.

அநாதி சிநேகத்தால் நம்மை சிநேகித்து உருக்கமான இரக்கங்களினாலும் நம்மை சேர்த்துக்கொள்ளுகிற அவரே நம்மைப் பார்த்து உலகத்தின் முடிவு பரியந்தம் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்று சொல்லுகிறார்.

நேசத்தை பொழியும்படியாக, அவருடைய அன்பிலே நாம் மெய் மறந்து ஜீவிக்கும்படியாக, அதற்காகவே என்றென்றும் நம்மோடுகூட இருக்கிறார்.

இன்னும் அவருடைய ஆள் தத்துவத்தை தியானித்துப் பாருங்கள். அவர் உங்கள் சகோதரனாக உங்களோடுகூட இருக்கிறதை உணருவீர்கள்.

உங்கள் போதகராக இருக்கிறதை உணருவீர்கள்.

ஆலோசனை கர்த்தாவாக இருக்கிறதை உணருவீர்கள்.

தாயைப் போன்று இருக்கிறதை உணருவீர்கள்; அவரைப் பற்றி பிடித்துக் கொள்ளுங்கள்.

அவர் உங்களோடுகூட இருக்க விரும்புகிறார். ஆகவேதான் உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களோடுகூட இருக்கிறேன் என்று வாக்குத்தத்தம் செய்தார்.

ஆனால், நீங்கள் அவரோடுகூட இருக்க விரும்புகிறீர்களா? அவரையே பிரியப்படுத்தி, அவரையே துதித்து மகிழ உங்களை ஒப்புக்கொடுப்பீர்களா?

நான் உன்னை விட்டு விலகுவதில்லை; உன்னை கைவிடுவதுமில்லை என்று கர்த்தர் சொல்லும்போது, ஆம்,

ஆண்டவரே நானும் உம்மை விட்டு விலகமாட்டேன். ஒரு போதும் பின்மாற்றத்திற்குள் செல்லவேமாட்டேன். விட்டு விட்டு வந்த பாவ பழக்க வழக்கத்திற்குள் பிரவேசிக்கவே மாட்டேன் என்று சொல்லி உங்களை ஒப்புக் கொடுப்பீர்களா?

அப்பொழுது கர்த்தர் உங்களை நிச்சயமாகவே ஆசீர்வதிப்பார்.

*''என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும்; நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன் என்றார்'' (யாத் 33:41).*

## அத்தியாயம் 10

# ஆதாயம்!

''கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்'' (பிலி *1:21*).

மனுஷன் தனக்கு பல காரியங்களில் ஆதாயம் வேண்டு மென்று எண்ணுகிறுன்.

வியாபாரத்தில் முதலீடு செய்கிறவர்கள் எவ்வளவு பணம் ஆதாயம் கிடைக்கும் என்பதிலேயே நோக்கமா யிருக்கிறுர்கள்.

அரசியல்வாதிகளுக்கு புகழ் ஒரு ஆதாயம்.

ஆனுல், தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்கோ ஆத்துமாக்களிலேயே ஆதாயம். நம்முடைய ஆத்து மாவை நாம் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

அதே நேரம் அழிவை நோக்கியும், நரகத்தை நோக்கி யும் ஓடுகிற ஜனங்களின் ஆத்துமாவையும் நாம் ஆதாயம் செய்ய வேண்டும்.

சமீபத்தில் ருமானிய தேசத்தில் பல ஆண்டுகள் சிறை யில் அடைக்கப்பட்டு, விடுதலையாக்கப்பட்ட போதகர் ரிச்சர்ட் உம்பிராண்ட் அவர்கள் சென்னைக்கு வந்திருந் தார்கள். அவர் கம்யூனிஸ்ட் தேசத்திலுள்ள அரசியல் வாதிகளைப் பற்றி தெரிவித்தார்.

அவர்கள் ஆத்துமாவில் நம்பிக்கை வைப்பதில்லை என்றும், ஒரு மனுஷனுடைய மரணத்தில் அவனுடைய உடல் உறுப்புக்கள் ரசாயண சிதைவடைகிறது; அதோடு அவன் முடிந்து போகிறுன். ஆவியோ, ஆத்துமாவோ ஒன்றும் கிடையாது என்றும் சொல்லுவதாக தெரிவித் தார்.

மரித்தவர்களிலிருந்து ஆதாயம் தேட அவர்கள் நினைக்கிறார்கள். மனுஷனை வெறுமையாய் புதைத்து விடுவது நஷ்டம் என்று எண்ணுகிற இவர்கள், செத்த மனித சரீரங்களை உரமாக பயன்படுத்துகிறார்கள்.

இன்னும் சிலர் மிருகக்காட்சி சாலைக்கு அனுப்பி இறந்து போன மனித சரீரங்களை மிருக காட்சி சாலையிலுள்ள மிருகங்களுக்கு உணவாக கொடுக்கிறார்கள்.

இன்னும் சில தேசத்தில் மனிதன் இறந்து போனவுடனேயே அவனுடைய கண்கள், சிறு நீரகங்கள் போன்ற உடல் உறுப்புக்களை எடுத்து ஆஸ்பத்திரிகளில் தேவையுள்ள மக்களுக்கு பொருத்தி அதன் மூலமாக ஆதாயம் தேடுகிறார்கள்.

நமது தேசத்தில் மரித்தவர்களை கொண்டுபோய் எரிக்கும் வழக்கம் இந்துக்கள் மத்தியில் இருக்கிறது.

அப்படி எரித்தாலும்கூட அவர்களுடைய ஆவி அடுத்த பிறவியில் நாயாகவோ, நரியாகவோ, பூனையாகவோ அவர்களுடைய நல்வினை, தீவினைகளுக்கேற்ப மீண்டும் பிறக்குமென்று எண்ணுகிறார்கள்.

ஆனால், கிறிஸ்துவினுடைய மரணத்தால், நமக்கு ஒரு மேன்மையான, மகிமையான நம்பிக்கையுண்டு. சாவு எனக்கு ஆதாயம் என்று அப்போஸ்தலனாகிய பவுல் மார்பு தட்டி முழங்குகிறார்.

அது வெளியரங்கமாக எல்லோருக்கும் தெரியக்கூடிய ஆதாயமல்ல. அது உள்ளான மனுஷனில் நாம் பெறும் ஆதாயமாகும்.

பூமியிலே நாம் கண்களை மூடும்போது பரலோகத்தில் நாம் கண்களை திறப்போம். அருமை இரட்சகரை முகமுகமாய் சந்திப்போம். ஆயிரம், பதினாயிரமான தேவ தூதர்களை காண்போம். பழைய ஏற்பாட்டு, புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களையெல்லாம் பார்த்து களிகூருவோம்.

நம்முடைய சரீரத்தை விட்டு ஜீவன் பிரிந்தாலும் நம்முடைய ஆத்துமாவானது பரலோக வாசஸ்தலங்களை சுதந்தரித்துக் கொள்ளும். அங்கே மகிமையான ஜீவ கிரீடம் நமக்காக வைக்கப்பட்டிருக்கிறது.

மரணமானது நம் தேவனை சந்திக்கக் கூடிய மகா அருமையான பாலமாகும். ஆம், சாவு நமக்கு ஆதாயமே!

உதாரணமாக, இந்தியாவிலிருந்து விமானத்தின் மூலமாய் சிங்கப்பூர் செல்வதற்கு ஏறக்குறைய நான்கு மணி நேரங்கள் ஆகக்கூடும். இந்த குறுகிய காலத்திற்குள் எவ்வளவு பெரிய மாறுதல்கள்! புதிய தேசம், புதிய அரசாங்கம், புதிய பண்பாடுகள், புதிய ஜனங்கள்.

அதைப் பார்க்கிலும் பெரிய மாறுதல்களை நாம் நம்முடைய மரணத்திலே அனுபவிக்க கூடும். அது உண்மையாகவே மிகப்பெரிய ஆதாயமாய் நமக்கு விளங்கப் போகிறது.

தேவபிள்ளையே, நீ இரட்சிக்கப்பட்டிருந்தால் மாத்திரமே சாவு உனக்கு ஒரு ஆதாயமாக இருக்கும். இல்லாவிட்டால் அதைவிட ஒரு பெரிய நஷ்டம் வேறொன்றுமில்லை.

ஒரு மனிதன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? என்று வேதம் கேட்கிறது.

நாம் தைரியமாகவேயிருந்து, இந்தத் தேகத்தை விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம் (II கொரி 5:8).

அத்தியாயம் 11

# அந்த வெள்ளிக் காசுகள்!

"அவர்கள் அவனுக்கு முப்பது வெள்ளிக்காசைக் கொடுக்க உடன்பட்டார்கள்" (மத் 26:15).

யூதாஸ்காரியோத்தின் மனம் தராசாக இயங்கியது!

ஒரு தட்டில் முப்பது காசுகளை வைத்தான். மறுதட்டில் இயேசு கிறிஸ்துவை வைத்தான்.

அவன் பார்வையில் வெள்ளி காசுகள்தான் பிரமாதமாக, மினுக்கலாக காட்சியளித்தது.

அடிமைகளைத்தான் விலை பேசுவார்கள். ஆனால் வெள்ளி காசுகளுக்காக இயேசுகிறிஸ்துவையே விலை பேசிவிட்டான் யூதாஸ்காரியோத்து!

அன்றைக்கு ஏவாள் தராசின் ஒரு பக்கத்தில் விலக்கப்பட்ட கனியை வைத்தாள். மறு பக்கத்தில் தேவனுடைய அன்பை வைத்தாள். அவளுடைய கண்கள் இச்சித்ததெல்லாம் அந்த பழத்தைதான்.

ஏசாயா தராசின் ஒரு பகுதியிலே சிரேஷ்ட புத்திர பாகத்தை வைத்தான். மறு பக்கத்திலே சிகப்பு நிறமான கூழை வைத்தான். அவன் கண்கள் திரும்பினதெல்லாம் சிகப்பு கூழைத்தான்.

சாலொமோன் தராசிலே ஒரு பக்கம் தேவனுடைய கிருபைகளை வைத்தான். மறுபக்கம் அந்நிய பெண்களை வைத்தான். அவனுடைய கண்கள் தேவனுடைய கிருபைகளை அசட்டை செய்து அந்நிய பெண்களையே தெரிந்து கொண்டது.

அந்த யூதாஸ்காரியோத்தை நோக்கிப் பாருங்கள். அவனுடைய ஆதி நிலைமை என்ன?

அவன் ஊழியம் செய்யும்படியாக முன் வந்தவன்; கர்த்தருடைய சீஷன் என்று அழைக்கப்பட்டவன்; ஜீவனுள்ள தேவனை ஆவியோடும், உண்மையோடும், ஆராதிப்பதற்கு தெரிந்துகொள்ளப்பட்டவன்; இயேசுவை பின்பற்றினவன். அற்புதங்களையும் அடையாளங்களையும் கண்ணாரக் கண்டவன்.

கிறிஸ்துவினுடைய வரங்களுக்கும், வாக்குத்தத்தங்களுக்கும் உரிமையானவன். கிறிஸ்துவினுடைய சீஷர்களுக்குள்ளே பொக்கிஷதாரர் பதவியை வகித்தவன். எல்லாவற்றிற்கும் மேலாக பெரிய அப்போஸ்தலனாக வர வேண்டியவன்.

ஆனால், இப்பொழுதோ அந்த பாக்கியங்களையெல்லாம் இழந்தான். வெள்ளிக்காசுகளை தேவ ஆலயத்திலே வீசியெறிந்தான். அந்த வெள்ளிக் காசுகளால் அவனுக்கு சமாதானம் ஏற்படவில்லை.

அவனுடைய உள்ளம் அவனை வாதித்தது. குற்றமில்லாத இரத்தத்தை காட்டிக் கொடுத்ததினால் பாவம் செய்தேனே என்று கதறினான்.

அவன் தன் கோபத்தையெல்லாம் தேவ ஆலயத்தின் மேல் காட்டினான். அந்த வெள்ளிக் காசுகளை தேவ ஆலயத்தில் வீசியெறிந்தான்.

ஏன் அவனுக்கு அவ்வளவு ஆத்திரம்? ஏன் அவன் வீசியெறிய வேண்டும்? தேவ ஆலயத்திற்கு வர ஏன் அவன் கால்கள் கூசினது?

அதுதான் குற்ற மனச்சாட்சி! துன்மார்க்கனுக்கு சமாதானமில்லை என்று வேதம் சொல்லுகிறது.

இன்று யூதாஸ்காரியோத்தின் நிலைமையென்ன?

இன்னும் அதிகமான வேதனை! நரகத்தில் துடி துடித்துக்கொண்டேயிருக்கிறான்

நான் நினைக்கிறேன், நரகத்தில் பாடுபடும் எல்லோரைப் பார்க்கிலும் அவன் மிகவும் அதிகமாக வேதனை அனுபவித்துக்கொண்டிருக்க வேண்டும்.

காரணம், அவனுடைய மனச்சாட்சி அவனை இன்னும் அதிகமாய் வாதித்தது. மார்பிலே அடித்துக்கொண்டு, பற்களை கடித்துக்கொண்டு தவிக்கிற அந்த யூதாஸை ஒரு முறை பாருங்கள்.

காரணம் என்ன?

பண ஆசை; பொருளாசை; புகழாசை.

கிறிஸ்தவர்களே, விசுவாசிகளே, ஊழியர்களே யூதாஸை நினைத்துக் கொள்ளுங்கள்.

அற்ப உலக சிற்றின்பங்களுக்காக கிறிஸ்துவை வேதனைப்படுத்திவிடாதிருங்கள்; காட்டி கொடுத்து விடாதிருங்கள்.

"இஸ்ரவேல் புத்திரரால் மதிக்கப்பட்டவருக்கு கிரயமாகிய முப்பது வெள்ளிக் காசை அவர்கள் எடுத்து, கர்த்தர் எனக்குக் கற்பித்தபடி குயவனுடைய நிலத்திற்காக அதைக்கொடுத்தார்கள்" (மத் 7:9,10).

## அத்தியாயம் 12

# விசுவாசத்தினாலே ஆபேல்!

''விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்'' (எபி 11:4).

மரித்தும் பேசுகிற பரிசுத்தவான்களுக்குள்ளே ஆபேல் முதன்மையானவர்.

ஆபேலை முதல் இரத்த சாட்சி என்றுதான் சொல்லலாம். முதல் பரிசுத்தவானென்றும் அழைக்கலாம். முதல் முதல் தேவனிடத்திலிருந்து நற்சாட்சி பெற்றவர் அவர் தான்.

வேதம் சொல்லுகிறது, ''ஆபேல் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான். அவனுடைய காணிக்கைகளைக் குறித்து தேவனே சாட்சி கொடுத்தார்'' (எபி 11:4).

ஆபேல் என்ற வார்த்தைக்கு சுவாசம் என்பது அர்த்தம். ''வாயு'' என்ற அர்த்தமும் உண்டு (vapour).

அவனுடைய சகோதரனான காயீன் ஆபேலை கொலை செய்தபோது ஆபேலின் ஆவி ஒரு வாயுவைப் போல பூமியை விட்டு கடந்து சென்றதை கவனித்து இருக்கக் கூடும்.

ஆனாலும், ஆபேலுடைய இரத்தமோ பேசிக்கொண்டேயிருந்தது. அந்த இரத்தம் என்ன பேசினது என்று நமக்கு தெரியாது.

தன்னுடைய சகோதரனை இரத்தத்திற்கு இரத்தம்பழி வாங்க வேண்டுமென்றே பேசி இருந்திருக்க வேண்டும்.

ஆபேலின் இரத்தம் கீழே சிந்தப்பட்டபோது கர்த்தர் அதை கேட்டு வானத்திலிருந்து கீழே இறங்கி வந்தார்.

''உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கி கூப்பிடுகிறது. உன் சகோதரனுடைய இரத்தத்தை உன் கையிலே வாங்கிக்கொள்ள தன் வாயைத் திறந்த இந்தப் பூமியில் நீ சபிக்கப்பட்டிருப்பாய். நீ நிலத்தைப் பயிரிடும்போது, அது தன் பலனை இனி உனக்குக் கொடாது; நீ பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பாய்'' என்று சொன்னார் (ஆதி *4:10, 11, 12*).

ஆபேலின் இரத்தத்தினால் காயீனுக்கு எவ்வளவு சாபங்கள்! எவ்வளவு கொடிய வேதனைகள்! அந்த இரத்தத்தினால் பூமி தன் வாயை திறந்தது. சாபம் வந்தது!

அதே நேரத்தில் இயேசுகிறிஸ்துவை நோக்கிப் பாருங்கள். அவருடைய இரத்தமும் அநியாயமாய் பூமியிலே சிந்தப்பட்டது.

பாவமறியாத அவர் நமக்காக தமது பரிசுத்த இரத்தத்தை சிந்தினார்.

பரிசேயரும் சதுசேயரும் அவருக்கு விரோதமாக கொடிய ஆலோசனை செய்தார்கள். பிலாத்து அவருக்கு மரண தீர்ப்பு அளித்தான். ரோம போர் சேவகர்கள் அவருக்கு முள்முடி சூட்டி கைகளிலும் கால்களிலும் ஆணிகள் கடாவி சிலுவையில் அறைந்தார்கள்.

ஆனால், அந்த நேரத்தில் அவர் செய்தது என்ன தெரியுமா? ''பிதாவே, இவர்களுக்கு மன்னியும்'' என்று கதறினார்.

தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே; அறியாமல் செய்கிற இந்த குற்றத்தை பொறுத்தருளும் என்று கெஞ்சினார்.

அவர் சிந்தின இரத்தமும் பூமியிலிருந்து கூப்பிட்டது. அந்த இரத்தம் என்ன சொல்லி கூப்பிட்டிருந்திருக்கும்?

வேதம் சொல்லுகிறது, ''ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்'' *(எபி 12:24).*

கிறிஸ்துவின் இரத்தம் நன்மையானவைகளைப் பேசினது.

தெய்வீக அன்பை பேசினது.

ஆசீர்வாதத்தை பேசினது.

இரட்சிப்பை பேசினது.

*நித்திய ராஜ்யத்திற்கு நம்மை தகுதிப்படுத்தினது!*

''புதிதும் ஜீவனுமான மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாகியிருக்கிறது'' *(எபி 10:20).*

# இளம் பிராயத்தில்...!

"தன் இளம்பிராயத்தில் நுகத்தைச் சுமக்கிறது மனுஷனுக்கு நல்லது" (புலம் 3:27).

இளம் பிராயம் அருமையான பிராயம். பிற்கால வாழ்க்கைக்கு அஸ்திபாரமிடும் பிராயம்.

இளம் பிராயத்தில் போதிக்கப்படுபவை ஒரு மனுஷனுடைய மூதிர்காலம் வரையிலும் அவனுக்கு ஆசீர்வாதமாக இருக்கக்கூடியது.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது. இளம் பிராயத்தில் நுகத்தை சுமக்கிறது மனுஷனுக்கு நல்லது என்று வேதம் சொல்லுகிறது.

இளம் பிராயத்திலே பாடுகளுக்குள்ளாக சென்ற ஒரு தேவனுடைய மனுஷனைக் குறித்து இன்றைக்கு நாம் தியானிப்போமா? அவன் பெயர் யோசேப்பு.

இளம் பிராயத்திலேயே யோசேப்புக்கு எத்தனை பாடுகள்; எத்தனை வேதனைகள்! அவன் மிக சிறுவயதிலேயே தன்னுடைய தாயை இழந்தான். தாய் பாசத்திற்காக ஏங்கிய யோசேப்பு தன் உள்ளத்தை கர்த்தர் பக்கமாய் திரும்பி அவராலே மாத்திரம் ஆறுதலடைந்து இருந்திருக்கக் கூடும்.

"என் ஆண்டவர், என்னுடைய தகப்பன் வீட்டிலுள்ள மற்ற சகோதரர்களுக்கெல்லாம் தாய்மார்கள் இருக்கிறார்கள். ஆனால் எனக்கோ தாயின் அன்பும் பாசமும் கிடைக்கவில்லை. நீரே எனக்கு தாயாய் இருப்பீரா? தாயைப்போல என்னை அரவணைத்து தேற்றுவீரா?" என்று ஜெபித்து இருந்திருப்பான்.

நம்முடைய ஆண்டவருக்கு ஏல்சடாய் என்ற நாமமும் உண்டு. அந்த பெயருக்கு தேவன் தாயைப்போல மார்பு உடையவர் என்பது அர்த்தமாகும்

(ஆதி 17:1 ஏசா 49:15, 16).

ஆம், இளம் பிராயத்தில் தாயை இழந்த வேதனை, கர்த்தரை அவன் உறுதியாய் பற்றிக்கொள்ளும்படி அவனுக்கு ஆசீர்வாதமாக மாறினது.

யோசேப்பு வாலிபனாக வளர்ந்தான். அந்தோ! அவனுடைய சகோதரர்கள் அவன் மேல் பொறாமையும் எரிச்சலும் கொண்டார்கள்.

தேவன் அவனுக்கு கொடுத்த சொப்பனங்களும் தரிசனங்களும் அவனுடைய சகோதரர்களுக்குள்ளே பொறாமையை கொண்டு வந்தன.

வேதம் சொல்லுகிறது, மனுஷன் படும் எல்லாப் பிரயாசமும், அயலானின் பொறாமைக்கு ஏதுவாய் இருக்கிறது (பிர 4:4).

''ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவனுடைய வீட்டாரே'' (மத் 10:36).

எவ்வளவுக்கு எவ்வளவு அவனுடைய சகோதரர்கள் யோசேப்பை பகைத்தார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு கர்த்தர் யோசேப்பை நேசித்தார்.

யோசேப்பின் பாடுகள், அவன் சுமக்க வேண்டிய நுகங்கள் நாளுக்குநாள் அதிகமாகிக்கொண்டே போனது. சோதனையின் மேல் சோதனை அவனுக்கு வந்தது.

அவன் குழியிலே போடப்பட்டான். வியாபாரிகளிடம் விற்கப்பட்டான். போத்திபாரின் வீட்டில் வேலைக்காரனாக பணியாற்றினான்.

அவ்வளவு சோதனையின் மத்தியிலும் தன்னை காண்கிற தேவனை அவன் உறுதியாக பற்றிக்கொண்ட

படியினாலே தேவ பயம் அவனுக்குள்ளே இருந்தபடியினாலே கர்த்தருடைய கிருபை அவனுக்கு கிடைத்தது.

போத்திபாரின் மனைவியினிடத்தில் தன் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்வது எப்படி என்று எண்ணி (ஆதி 39:9) தன்னைத்தான் பாதுகாத்துக்கொண்டான்.

தேவபிள்ளையே, தேவபக்தி உன் உள்ளத்தில் இருக்குமென்றால் கர்த்தர் உன்னை எல்லா சோதனைகளிலிருந்தும் பாதுகாப்பார்.

வேதம் சொல்லுகிறது, ''மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்'' (I கொரி 10:13).

யோசேப்பு எவ்வளவுக்கு எவ்வளவு பாடுகளின் பாதையிலே போய் நுகத்தை சுமந்தானோ அவ்வளவுக்கு அவ்வளவு கர்த்தர் அவனை ஆசீர்வதித்து கனம்பண்ணினார். யோசேப்பு எகிப்திலே பெரிய அதிகாரியாக உயர்த்தப்பட்டான். அல்லேலூயா!

''நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை; ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்கு முன்னும், அவரை உன் வாலிபப் பிராயத்திலே நினை'' (பிர 12:1,7).

## அத்தியாயம் 14

# யோபுவின் பொறுமை!

''யோபின் பொறுமையைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்களே'' (யாக் 5:11).

பழைய ஏற்பாட்டு புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களிலே யோபுவின் பொறுமை மிகவும் ஆச்சரியமானது!

அப்போஸ்தலனுகிய யாக்கோபு தன்னுடைய நிருபத்திலே யோபுவின்பொறுமையைக் குறித்து ஞாபகப்படுத்துகிருர்.

நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே. இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிருேமே! என்று எழுதுகிருர் (யாக் 5:8,11). யோபுவின் பொறுமை என்ன?

1. **இழப்பிலே பொறுமை:-** யோபுவின் பொறுமையை முதன் முதலில் அவருடைய பிள்ளைகளை இழந்த நிலைமையில் காண்கிருேம்.

பத்து பிள்ளைகளையும் ஒரே நாளில் மரிக்க கொடுப்பது எத்தனை வேதனையானது! பிள்ளைகளை இழந்தார். மிருக ஜீவன்களை இழந்தார். அவருடைய உள்ளம் எவ்வளவு துடிதுடித்து இருந்திருக்கும்.

எனினும் மிகுந்த பொறுமையோடு கூட, ''கர்த்தர் கொடுத்தார்; கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்ருர்'' (யோபு 1:21).

2. **பிணியில் பொறுமை:-** பிள்ளைகளை இழந்த வேதனை ஒருபக்கம். அவருடைய சரீரமெல்லாம் வியாதியினுல் பாடுபட்டது மற்ருெரு பக்கம்.

''பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்'' என்பது பழமொழி. வேதம் சொல்லுகிறது, ''சாத்தான் யோபுவின் உள்ளங்கால்.தொடங்கி அவன் உச்சந்தலை மட்டும் கொடிய பருக்களால் அவனை வாதித்தான்' (யோபு 2:7).

இதனல் அவனுடைய சரீரம் உருத்தெரியாமல் குலைந்தது (யோபு 2:12).

போதாத குறைக்கு அவனுடைய மனைவி அவரை ஒரு பக்கம் தூஷித்தாள். நீர் ஏன் இன்னும் ஜீவனை வைத்துக் கொண்டு இருக்கிறீர்? தேவனை தூஷித்து விட்டு ஜீவனை விடக்கூடாதா என்ருள்.

அந்த பிணியின் நேரத்திலும் யோபு பக்தன் எவ்வளவு பொறுமையாய் இருந்தார்.

கர்த்தரே பீறினர், அவரே குணமாக்குவார் என்று வேதம் சொல்லுகிறதைப் போல (ஓசி 6:1) யோபு பக்தன் கர்த்தருடைய குணமாக்குதலுக்காக பொறுமையோடு காத்திருந்தார்.

**3. இருளில் பொறுமை**:- யோபுவின் வாழ்க்கையை யெல்லாம் இருள் சூழ்ந்து கொண்டது.

எங்கும் இருள், எதிலும் இருள். தேவனுடைய பிரசன்னத்தை காண முடியாத இருள் சூழ்ந்து கொண்டபடியினல் ''நான் அவரை எங்கே கண்டு சந்திக்கலாம்'' என்று அவர் ஏங்குகிருர் (யோபு 23:3).

''இதோ, நான் முன்னுகப் போனுலும், அவர் இல்லை, பின்னுகப் போனுலும் அவரைக் காணேன். இடது புறத்தில் அவர் கிரியை செய்தும் அவரைக் காணேன்; வலது புறத்திலும் நான் அவரைக் காணுதபடிக்கு ஒளித்திருக்கிருர்''(யோபு 23:8,9).

தேவ பிரசன்னத்தைக் கூட இழந்து விடக்கூடிய அந்த கொடிய இருளிலும் யோபு பக்தன் கர்த்தர் மேல் நம்பிக்கையாயிருந்து பொறுமையாய் இருந்தார்.

தேவபிள்ளையே, நீயும் இவ்விதமான பாடுகளின் பாதையில் செல்கிறாயா? எல்லா பக்கமும் இருள் சூழ்ந்ததைப் போல வெறுமையாய் இருக்கிறதா? உன்னுடைய ஜெபங்களுக்கு பதில் வரவில்லையே என்று தவிக்கிறாயா?

கலங்காதே, உன்னுடைய பொறுமை ஒருபோதும் வீண் போவதில்லை.

யோபுவின் துயரங்களெல்லாம் ஒருநாள் மாறினது. அவருடைய கண்கள் உயிரோடிருக்கிற மீட்பரை கண்டு மகிழ்ந்தது (யோபு 19:25).

கர்த்தர் அவருக்கு இரட்டிப்பான ஆசீர்வாதத்தைக் கொடுத்தார் (யோபு 42:12).

அவருக்கு ஏழு குமாரரும் மூன்று குமாரத்திகளும் பிறந்தார்கள் (யோபு 42:13).

கர்த்தர் அவருக்கு நீடிய ஆயுளையும் சமாதானமான நாட்களையும் நான்கு தலைமுறையாக பிள்ளைகளையும் பிள்ளைகளுடைய பிள்ளைகளையும் காணும் பாக்கியத்தையும் கொடுத்தார். தேவனுடைய பிள்ளையே, பொறுமையை நீ கைக்கொள்ளுவாயென்றால் என்றென்றும் ஆசீர்வதிக்கப்படுவாய்.

''ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லோரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்'' (II பேதுரு 3:9).

## அத்தியாயம் 15

# எங்கே சந்திக்கலாம்?

''நான் அவரை எங்கே கண்டு சந்திக்கலாம் என்பதை அறிந்தால் நலமாயிருக்கும்'' (யோபு 29:3).

யோபு பக்தனின் ஏக்கம் அதுதான். நான் என் ஆண்டவரை எங்கே கண்டு சந்திக்கலாம்? எங்கே அவரோடு உறவாடலாம்? எங்கே அவருடைய பாதத்தில் என்னுடைய பாரங்களையெல்லாம் இறக்கி வைக்கலாம்?

அருமையான தேவனுடைய பிள்ளையே, முழு உலகமும் அதற்காக ஏங்குகிறது.

கவலையும் கண்ணீரும் நிறைந்த இந்த உலகத்தில் பிரச்சனைகளோடுகூட வாழும் மக்கள் இருளிலே புழுக்களைப்போல நெளிந்து, எங்களுக்கு ஆறுதல் தருகிற தெய்வம் யார்? எங்களை பாதுகாக்கிறவர் யார்? எங்களை வழி நடத்துகிறவர் யார்? பிசாசின் பிடியிலிருந்து எங்களுக்கு அடைக்கலம் தருகிறவர் யார்? என்றுச் சொல்லி எண்ணுகிறார்கள்; ஏங்குகிறார்கள்.

நமது தேசத்தில் எண்பது கோடி மக்கள் உண்டு. அவர்கள் எல்லாருடைய ஏக்கமும் இதுதான். உண்மையான தேவனை நாங்கள் எங்கே சந்திக்கலாம்? எங்கே நாங்கள் அவர்களோடுகூட உறவாடலாம்?

அதற்காகவே புண்ணிய ஸ்தலங்களை நோக்கி ஓடுகிறார்கள். குகைகளில் சென்று அமர்ந்து தவமிருக்கிறார்கள். ஆணிகளின் மேல் போய் படுக்கிறார்கள். சரீரத்தை மிகவும் வருத்திக்கொள்ளுகிறார்கள்.

பழைய ஏற்பாட்டிலே ஆதாம், ஏவாள் அவரை ஏதேன் தோட்டத்திலே சந்தித்தார்கள்.

ஆபிரகாம் பலிபீடத்தின் ஜெபவாலையில் சந்தித்தார்.

மோசே ஆசரிப்பு கூடாரத்திலே சந்தித்தார்.

சாலொமோன் கர்த்தருடைய தேவாலயத்திலே சந்தித்தார்.

இன்றைக்கு நாம் கர்த்தருடைய ஆலயமாக இருக்கிறோம். ஆவியானவர் நமக்குள்ளே வாசமாக இருக்கிறார்.

என்றாலும், நாம் தேவனை சந்திக்கும்படியாக, கர்த்தருடைய பிள்ளைகளோடு கூட ஐக்கியம்கொண்டு ஆராதிக்கும்படியாக கர்த்தருடைய ஆலயத்திற்கு செல்லுவது நமக்கு ஆனந்த பாக்கியமான அனுபவமாக விளங்குகிறது.

சங்கீதக்கரரன் சொல்லுகிறார்: கர்த்தருடைய ஆலயத்திற்கு போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாக இருந்தேன் (சங் 122:1).

ஆம், கர்த்தருடைய ஆலயம்தான் நாம் தேவனை சந்திக்கும் இடம். தேவனுடைய பிரசன்னத்தால் நிரம்பியிருக்கிற இடம். தேவ சமுகத்தில் ஆனந்தத்தால் பாடி, துதித்து, களிகூருகிற இடம்.

அன்று அன்னாள் தேவ சமுகத்திற்கு ஓடி வந்து தன்னுடைய குறைகளையெல்லாம் நிறைவாக்கி மகிழ்ச்சியோடு சென்றாள் (I சாமு 1:10).

ஆயக்காரன் தேவ ஆலயத்தை நோக்கி தன் கண்களை ஏறெடுக்க துணியாமல் தன் மார்பிலே அடித்துக்கொண்டு பாவ அறிக்கை செய்து நீதிமானாக்கப்பட்டவனாய் கடந்து சென்றான்.

ஏசாயா அந்த தேவ ஆலயத்திற்கு வந்து தேவ தரிசனம் பெற்று, சுத்திகரிக்கப்பட்டவனாய் பெரிய தீர்க்கதரிசியாய் விளங்கினான்.

தேவபிள்ளையே, கர்த்தருடைய ஆலயம் நாம் தேவனை சந்திக்கும் இடம்; தேவனை ஆராதிக்கும் இடம்; தேவனுடைய ஆலோசனைகளை பெறும் இடம்.

மாத்திரமல்ல, நம்முடைய குறைகள் எல்லாம் நீங்கி நிறைவும், சந்தோஷமும், சம்பூரணமும் பெற்றுக்கொள்ளுகிற ஒரு இடம்.

தேவ ஆலயத்தைப் பற்றிய பக்தி வைராக்கியம் உனக்கு உண்டா?

''இதோ மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள்'' (வெளி 21:3).

''உம்முடைய பிரகாரங்களில் வாசமாயிருக்கும்படி நீர் தெரிந்துகொண்டு சேர்த்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்; உம்முடைய பரிசுத்த ஆலயமாகிய உமது வீட்டின் நன்மையால் திருப்தியாவோம்'' (சங் 65:4).

# அடியானின் வீடு!

"இப்போதும் உமது அடியானின் வீடு என்றைக்கும் உமக்கு முன்பாக இருக்கும்படி அதை ஆசீர்வதித்தருளும்" (IIசாமு 7:29).

தேவனுடைய பிள்ளைகளின் வீடு ஆசீர்வாதமாக இருக்கும். ஏனென்றால், அங்கே தேவனாகிய கர்த்தர் வாசம் பண்ணுகிறார்! அங்கே தேவனுடைய பிள்ளைகள் கர்த்தரைப் பாடி ஆடி துதிக்கிறார்கள்.

ஆம், நீதிமான்களின் கூடாரத்தில் இரட்சிப்பின் கெம்பீர சத்தமுண்டு.

நான் முதல் முறை சகோ. ஜீவானந்தம் அவர்களுடைய வீட்டிற்குச் சென்றபோது அங்கே சுவரில் எழுதப்பட்டிருந்த ஒரு வாசகம் என் இருதயத்தை மிகவும் தொட்டது.

அது என்ன வாசகம் தெரியுமா? "நான் பரதேசியாய்த் தங்கும் வீட்டிலே உமது பிரமாணங்கள் எனக்குக் கீதங்களாயின" (சங் 119:54).

நாம் நமது வீடுகளிலே பரதேசிகளைப்போல தங்கினாலும் கர்த்தருடைய பிரமாணங்கள் நம்மோடு இருக்கிறபடியினாலே தேவனுடைய ஆசீர்வாதங்களும், பசுமையாகிகாலங்களும் நம்மை நிரப்பிக்கொள்கின்றன. கர்த்தரும் நம்மோடு வாசம்பண்ணுகிறார்.

ஆறு லட்சத்திற்கும் அதிகமான மக்களை தீர்க்கதரிசியாகிய மோசே வனாந்தரத்தில் வழி நடத்தியபோது அவர்கள் மத்தியிலே தங்குவதற்காக கர்த்தர் தமக்காகவும் ஒரு கூடாரம் அமைக்கும்படி சொன்னார்.

அதுதான் ஆசரிப்பின் கூடாரம். அந்த கூடாரத்தில் கர்த்தர் வாசம் பண்ணி, அந்த கூடாரத்தை தமது சேக்கனு மகிமையினுல் நிரப்பினுர்.

அதுபோலவே, சாலொமோன் ஆலயத்தை கட்டின போது அங்கே வாசம் பண்ணும்படி அங்கே இறங்கி வந்தார்.

இயேசுகிறிஸ்துவும், சீஷர்களும் எம்மா ஊருக்குச் சென்றபோது கிறிஸ்து அவர்களோடு நடந்தது மாத்திர மல்லாமல், அவர்களுடைய வீட்டிற்குள்ளும் சென்ருர்.

அந்த ஆண்டவர் நிச்சயமாகவே உங்களுடைய வீட்டிலே உங்களோடும் வாசம் பண்ணுவார். மட்டுமல்ல, அவர் அப்பத்தையும், தண்ணீரையும் ஆசீர்வதிப்பார். வியாதியை உன்னைவிட்டு விலக்குவார்.

அந்த அருமை ஆண்டவர்தாமே உன்னுடைய வீடு திறம்பட நடத்தப்படவும், உன் கையின் பிரயாசங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படவும் உனக்கு அநுக்கிரகம் செய்வார்.

உன்னுடைய வீடு என்றென்றைக்கும் ஆசீர்வதிக்கப் படுவதாக. உன் கர்ப்பத்தின் கனியும், உன் நிலத்தின் கனியும், உன் மாடுகளின் பெருக்கமும், உன் ஆடுகளின் மந்தைகளுமாகிய உன் மிருக ஜீவன்களின் பலனும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்.

உன் கூடையும், மாப்பிசைகிற உன் தொட்டியும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். நீ வருகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய், நீ போகையிலும் ஆசீர்வதிக்கப் பட்டிருப்பாய் (உபா 28:4,5,6).

தேவபிள்ளையே, கர்த்தர் உன் வீட்டை தொடர்ந்து ஆசீர்வதிக்க வேண்டுமானுல், கர்த்தருடைய வீட்டைக் குறித்து வைராக்கியமுடையவனுயிருக்க வேண்டும்

தாவீதின் வீடு தலைமுறை தலைமுறையாக ஆசீர் வதிக்கப்பட்டதற்கு முக்கிய காரணம் தாவீது கர்த்தருடைய வீட்டின் மேல் அளவில்லாத வாஞ்சையும் தாகமும் வைத்திருந்ததுதான்.

கர்த்தருடைய ஆலயம் கட்டப்பட ஏராளமான பொன்னையும், வெள்ளியையும், கேதுரு மரங்களையும் சேர்த்து வைத்திருந்தார். மட்டுமல்ல, கர்த்தருடைய ஆலயம் என்ற சொல்லே அவருக்கு மிகுந்த மனமகிழ்ச்சியாயிருந்தது.

தேவபிள்ளையே, உன் உள்ளம் கர்த்தர் மேலும், கர்த்தருடைய ஆலயத்தின் மேலும், ஊழியங்களின் மேலும் வாஞ்சையாய் இருக்கட்டும். அப்பொழுது ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் உன்னைத்தொடரும். நீ கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பாய்.

''இதோ, கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான். கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார்'' **(சங் 128:4,5).**

# என்ன ஜாதி?

''உன் தொழிலென்ன? நீ எங்கேயிருந்து வருகிறாய்? உன் தேசம் எது? நீ என்ன ஜாதியான் என்று கேட்டார்கள்'' (யோனா 1:8).

கிறிஸ்தவர்களாய் இருந்துகொண்டு ஜாதி வித்தியாசம் பார்ப்பதும் மற்றவர்கள் என்ன ஜாதியென்று ஆராய்ந்து கொள்ள முயற்சிப்பதும் வேதனையான ஒரு காரியம். இதனால் புறஜாதியார் கிறிஸ்துவுக்குள் வருவதற்கு தயக்கப்படுகிறார்கள். கர்த்தருடைய நாமமும் அவமதிக்கப்படுகிறது.

ஒருமுறை ஒரு சகோதரன் என்னைப் பார்த்து, ''நீங்கள் ஏன் இந்த ஜாதி வித்தியாசத்தைப்பற்றி தாக்கி பிரசங்கிக்கக்கூடாது? தாக்கி எழுதக்கூடாது?'' என்று கேட்டார்.

அதற்கு நான் மத்தேயு 17:21- யை திறந்து காண்பித்தேன். ''இந்த ஜாதி பிசாசு ஜெபத்தினாலும், உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப் போகாது'' என்று சொன்னேன்.

இன்று அநேக திருச்சபைகளில் எலெக்ஷன் வரும் போது பெரும்பாலும் அது ஜாதியின் அடிப்படையில் இருப்பது மிகவும் வேதனையான ஒரு காரியம்.

பெரிய பெரிய பிஷப் எலெக்ஷன்கள் கூட ஜாதி அடிப்படையில் நடப்பது சாத்தானுக்குத்தான் கொண்டாட்டமே தவிர, கர்த்தருக்கு மகிமையைக் கொண்டு வருவதில்லை.

யோனாவைப் பார்த்து நான்கு முக்கிய கேள்விகளை கப்பலில் உள்ளவர்கள் கேட்டார்கள். முதல் கேள்வி அவ

னுடைய தொழிலைப் பற்றியது. இரண்டாவது கேள்வி அவனுடைய இருப்பிடத்தைப் பற்றியது. மூன்ருவது கேள்வி அவனுடைய தேசத்தைப் பற்றியது. கடைசி கேள்வி அவனுடைய ஜாதியைப் பற்றியது.

ஆனல் அவனுடைய பதிலில் முதலில் குறிப்பிடுவது அவனுடைய ஜாதியைத்தான். நான் எபிரெயன் என்ருன்.

இன்று நாம் நம்மை ''கிறிஸ்தவர்கள்'' என்று மாத்திரம் சொல்லுவதைத் தவிர வேறு எந்த ஜாதியும் குறிப்பிடுவது கர்த்தருக்கு பிரியமானதல்ல.

ஏனென்ருல் வேதம் தெளிவாக சொல்லுகிறது: ''உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை. அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்ருயிருக்கிறீர்கள்'' (கலா 3:27,28).

நமக்கு ஜாதி வித்தியாசம் இல்லையென்ருல் நாம் யார்? என்று ஒருவேளை நாம் கேட்கக்கூடும். ஆம், நாம் யார் தெரியுமா? நாம் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததி, நாம் பரிசுத்த ஜாதி, நாம் கர்த்தருக்கு சொந்தமான ஜனம் (II பேது 2:9).

மட்டுமல்ல, நம்முடைய தேவன் நம்மிடத்தில் அன்புகூர்ந்து நம்முடைய பாவங்களற நம்மை கழுவி நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கியிருக்கிருர் (வெளி 1:6).

பரலோகம் நம்மை பார்க்கும்போது நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாகவே காண்கிறது. மீட்கப்பட்ட ஜனங்கள் கர்த்தரை பாடி துதிக்கும்போது, ''நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினுலே மீட்டுக்கொண்டு,

எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளு வோம் என்று புதிய பாட்டைப் பாடினார்கள்''

(வெளி 5:9,10)

சிலர் கிறிஸ்தவர்களாய் இருந்தும் அரசாங்க சலுகை களுக்காக தங்களை தாழ்ந்த ஜாதியாக கொள்ளுகிறார்கள். கிறிஸ்தவர்களாய் இருந்தும் இந்து பெயர்களை சூட்டிக் கொண்டு மருத்துவக்கல்லூரிக்கும் அரசாங்க உத்தியோகத் திற்கும் விண்ணப்பிக்கிறார்கள்.

இதனால் ஒருவேளை உலகப்பிரகாரமான சில ஆதாயங் கள் அவர்களுக்கு கிடைக்கக்கூடும். ஆனால் நித்தியம் அவர்களை புறக்கணித்து தள்ளுமே! பரலோகம் அவர்களை வெளியே துரத்தி விடுமே! அப்போது என்ன செய் வார்கள்?

நாம் தாழ்ந்த ஜாதி அல்ல, நாம் பெரிய ஜாதியானவர் கள். பரிசுத்த ஜாதியானவர்கள். நான் உன்னை பெரிய ஜாதியாக்குவேன் என்று கூறி கர்த்தர் ஆபிரகாமை அழைத்தார் (ஆதி 12:2).

''கர்த்தரைத் தங்களுக்கு தெய்வமாகக்கொண்ட ஜாதி யும், அவர் தமக்குச் சுதந்தரமாகத் தெரிந்து கொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது'' (சங் 33:12).

## அத்தியாயம் 18

# கணக்குப் பாருங்கள்!

''இதிலே ஞானம் விளங்கும்; அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடையவன் கணக்குப் பார்க்கக் கடவன்'' (வெளி *13:18*).

ஒரு முறை ஒரு சகோதரிக்கு ஏராளமான பிசாசுகள் பிடித்திருந்தது. அங்குள்ள ஊழியக்காரர்கள் ஊக்கமாக ஜெபித்தபோது ஒவ்வொரு பேய்களும் தன்னுடைய பெயரை அறிக்கையிட்டு அலறி ஓடினது.

கடைசியாக ஒரு பெரிய பிசாசு போகமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்துக் கொண்டிருந்தது. இயேசுவின் நாமத்தினல் அதட்டியபோது அது தன்னுடைய பெயரை 'நம்பர் பதிமூன்று'' என்று சொல்லி பிறகு விலகியது.

பதிமூன்று என்றல் என்ன? ஏன் அந்த பிசாசு தன்னுடைய பெயரை ''நம்பர் பதிமூன்று'' என்று சொன்னது என்று அந்த ஊழியக்காரர்களுக்கு புரியவில்லை.

ஆனல் அதிலே கிரேக்க மொழி தெரிந்த ஒருவர் இருந்தார். அவர் உடனே சொன்னர்: கிரேக்க மொழியில் பதிமூன்று என்ற எண்ணனது பிசாசுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. வேதத்தில் பிசாசுக்குரிய பெயரை எடுத்து அவைகளின் இலக்கத்தைப் பார்த்தால் பதிமூன்று என்ற எண் வரும் என்று சொல்லி வலுசர்ப்பம், பெயர்செபூல், அபத்தோன், அப்பல்லியோன் என்ற பெயர்களின் ஒவ்வொரு இலக்கமும் பதிமூன்று என்பதை விளக்கிக் காண்பித்தார்.

நீங்களும் கூட்டி கணக்குப் பாருங்கள். வெளிப்படுத்தின விசேஷத்தில் வலுசர்ப்பம் என்ற பிசாசின் பெயர் பதிமூன்று முறை குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அது தனது வாலினுல் நட்சத்திரம் போல் பிரகாசித்த பரிசுத்தவான்களை கீழே இழுத்துப் போட்டது. அநேகரை நீதிக்கு உட்படுத்தின பரிசுத்தவான்களை, வானத்தில் நட்சத்திரங்களைப் போல ஜொலித்த நிலையிலிருந்து பண ஆசை, பொருளாசை, மண்ணுசை, பெண்ணுசையின் நிமித்தம் பூமியில் தள்ளியது! (வெளி 12:4).

தேவபிள்ளையே, விழிப்படைவாயாக! இந்த பதிமூன்ரும் நம்பரையுடைய வலுசர்ப்பமானது இந்த கடைசிக் காலத்தில் பலமாக கிரியைச் செய்கிறது.

ஆதாமுக்கு பின் பதிமூன்ரும் தலைமுறையில் வந்தவன் தான் நிம்ரோத் என்ற ராஜா. இவனுடைய ஆட்சியில் தான் விக்கிரக ஆராதனை, சொரூப வணக்கம் போன்றவைகளெல்லாம் பெருகினது.

இவனுடைய ஆட்சியில்தான் ஜனங்கள் பெருமை கொண்டு பேர் உண்டாக வானத்தை அளாவும் பாபேல் என்ற கோபுரத்தை கட்டினுர்கள் (ஆதி 11:8-10).

நிம்ரோத்தின் மனைவி வேசிகளின் தாயானுள். இன்றைக்கும் இந்த பதிமூன்ரும் எண்ணுடைய நிம்ரோத்தின் ஆவி அநேக சபைகளில் சுவிசேஷத்தைப் பரவ விடாதபடி கட்டி வைத்திருக்கிறது.

மாற்கு 7:21, 22 வசனங்களை வாசித்துப் பாருங்கள். அங்கே கிறிஸ்து பதிமூன்று வகையான பொல்லாத பாவங்களை எடுத்துரைத்திருக்கிருர். அந்த வசனத்தை வாசித்து எண்ணிப் பாருங்கள்.

''எப்படியெனில், மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபச்சாரங்களும், வேசித்தனங்களும், கொலை பாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டு வரும்.''

[illegible]

"சிங்கத்தின் மேலும் விரியன் பாம்பின் மேலும் நீ நடந்து, பால சிங்கத்தையும், வலுசர்ப்பத்தையும் மிதித்துப் போடுவாய்" (சங் 91:13).

# மறுபடியும் வருவார்!

''இயேசுவானவர் எப்படி வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்'' (அப் 1:11).

இயேசுகிறிஸ்து மறுபடியும் வருவார் என்ற வார்த்தை எப்பொழுதும் நம்முடைய இருதயத்தை பரவசப்படுத்து கிறது!

அதுதான் நம்முடைய வாழ்க்கையிலுள்ள மேன்மை யான மகிமையான நம்பிக்கை. இனிமையான எதிர் பார்ப்பு!

முதல்முறை இயேசுகிறிஸ்து பூமியிலே வந்தபோது அவர் நமக்காக மரிக்கும்படி வந்தார். கல்வாரி சிலுவை யிலே தன்னுடைய ஜீவனைக் கொடுத்து நமக்காக விலைக் கிரயம் செலுத்தினார், பாவமன்னிப்பையும் இரட்சிப்பை யும் தந்தார்.

ஆனால் இனி வரும்போது பலியாகிற ஆடாக அல்ல, ராஜாதி ராஜாவாக, கர்த்தாதி கர்த்தராக வருவார். கிறிஸ்து தெரிந்துகொள்ளப்பட்ட தம்முடைய பிள்ளை களுக்காகவே வருவார். தம்முடையவர்களை தம்மிடம் சேர்த்துக்கொள்ள ஆவலுள்ளவராய் வருவார்.

அவருக்காக காத்துக்கொண்டு இருக்கிறவர்களுக்கு அவர் தரிசனமாவார் என்று வேதம் சொல்லுகிறது (எபி 9:22).

ஒவ்வொரு கிறிஸ்தவனும் அந்த நாளுக்காக ஏங்கு கிறான், எதிர்பார்க்கிறான். ஆவியானவரும் அந்த நாளுக் காக நம்மை ஆயத்தப்படுத்துகிறார்.

வேதம் சொல்லுகிறது: ''இதற்கு நம்மை ஆயத்தப் படுத்துகிறவர் தேவனே; ஆவியென்னும் அச்சாரத்தை நமக்குத் தந்தவரும் அவரே'' (II கொரி 5:5).

அவருடைய வருகையில் அவருடைய பிள்ளைகள் களி கூருவார்கள். அவருடைய ஊழியர்களுக்கு மிகுந்த கொண்டாட்டமாக இருக்கும்.

பாடுகளின் வேதனைகளின் மத்தியில் கர்த்தருடைய ஊழியத்தை செய்தவர்களை அவர் தன் வருகையின்போது எவ்வளவாய் கனம்பண்ணுவார்.

இயேசு சொன்னார்: ''எஜமான் வரும்போது, விழித் திருக்கிறவர்களாக காணப்படுகிற ஊழியக்காரரே பாக்கி யவான்கள், அவர் அரைகட்டிக்கொண்டு, அவர்களைப் பந்தியிருக்கச் செய்து, சமீபமாய் வந்து, அவர்களுக்கு ஊழியஞ் செய்வார் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'' (லூக் 12:37).

அன்று அவர் அன்போடுகூட நம்முடைய முதுகை தட்டிக்கொடுத்து, ''உண்மையும் உத்தமமுமான ஊழியக் காரனே, நீ கொஞ்சத்தில் உண்மையுள்ளவனாய் இருந் தாய். உன்னை அநேகத்தின்மேல் அதிகாரியாய் வைப் பேன்'' என்பார்.

இன்றைக்கு நம்முடைய தேசத்தில் அநேக தேவ ஊழி யக்காரர்கள் வறுமை கோட்டின் அடித்தளத்தில் வாழு கிறார்கள்.

கிராமப் புறங்களிலும் சேரிவாழ் மக்கள் மத்தியிலும் மிகக் குறைந்த வருமானத்தை பெற்றுக்கொண்டு இந்து முன்னணி போன்ற இயக்கங்களின் எதிர்ப்புகளின் மத்தி யிலே தவிக்கிறார்கள்.

அநேக சுவிசேஷகர்களுக்கு நிரந்தரமான வரு மானமோ அல்லது மக்களின் ஒத்துழைப்போ இருப்ப

தில்லை. கிறிஸ்துவினுடைய வருகைதான் அவர்களுடைய எல்லாப் பிரச்சனைக்கும் ஒரு நிவாரணமாய் இருக்கும்.

இயேசு வருகையிலே தம்முடைய பிள்ளைகளை தம் மோடுகூட அணைத்துக்கொள்வார். நான் எங்கே இருக்கிறேனோ என்னுடைய ஊழியக்காரன் அங்கே இருப்பான் என்று யோவான் 12:26-ல் இயேசு சொன்னார்.

மட்டுமல்ல, அவர் பிதாவை நோக்கி பிதாவே, என்னுடைய பிள்ளைகள் எப்பொழுதும் என்னோடுகூட இருக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டார் (யோவா 17:24).

தேவபிள்ளையே, உலகத்தில் பாடுகளும் உபத்திரவங்களும் இருந்தாலும் உன்னை அழைத்த தேவனுக்காக உண்மையும் உத்தமமுமாக நிற்பாயா?

அவருடைய வருகையின்போது அவர்தாமே தம்முடைய பொற்கரத்தினால் உன் கண்ணீர் யாவையும் தொட்டு துடைப்பார். ஆம், அந்த நாள் மிகவும் சமீபித்திருக்கிறபடியால் மகிழ்ந்து களிகூரு.

''இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல''
(ரோமர் 8:18).

அத்தியாயம் 20

# தேவனுக்கு மகிமையுண்டாவதாக...!

''தேவனுக்கு மகிமையுண்டாவதாக என்று எப்பொழுதும் சொல்வார்களாக''(சங் 70:4).

ராஜாக்களுக்கு ஒரு மேன்மையுண்டு; ராஜாதி ராஜாவுக்கு அதிகமான மகிமையுண்டு! நம்மால் கர்த்தர் மகிமைப்படுகிறாரா? அல்லது தூஷிக்கப்படுகிறாரா?

சில பிள்ளைகள் பெற்றோருக்கு புகழையும், கீர்த்தியையும் தேடிக்கொண்டு வருவார்கள். சில பிள்ளைகளோ அவமானத்தையும், தலை குனிவையும் கொண்டு வருவார்கள்.

சில மாணவர்கள் ஆசிரியர்களுக்கு பெருமை தேடித் தருவார்கள். சிலர் ஆசிரியர்களின் பெருமைகளை நாசமாக்கி விடுவார்கள்.

சில வீரர்கள் தேசத்திற்கு வெற்றியை குவிப்பார்கள்; சிலரோ எட்டையப்பனைப் போல காட்டிக் கொடுப்பார்கள்.

சரி நீ ராஜாதி ராஜாவுடைய நாமத்திற்கு மகிமையை கொண்டு வருகிறவனாக இருக்கிறாயா?

சிலர் பிரசங்கத்திலே எப்பொழுது பார்த்தாலும் தேவனுக்கு மகிமையுண்டாவதாக என்றுச் சொல்லுவார்கள். சங்கீதக்காரன்கூட அப்படிச் சொல்ல வேண்டுமென்று தமது சங்கீதத்தில் எழுதுகிறார்.

உம்மைத் தேடுகிற யாவரும் உம்மில் மகிழ்ந்து சந்தோஷப்படுவார்களாக; உமது இரட்சிப்பில் பிரியப்படுகிறவர்கள் தேவனுக்கு மகிமையுண்டாவதாக என்று எப்பொழுதும் சொல்வார்களாக (சங் 70:4)

நாம் மகிமையுண்டாவதாக என்றுச் சொல்லுவது மாத்திரமல்ல, அவரை மகிமைப்படுத்துகிறவர்களாகவும் அவரை உயர்த்தி மேன்மைப்படுத்துகிறவர்களாயும் விளங்கவேண்டும்.

எந்த விதத்திலும் நம்முடைய வாழ்க்கையின் மூல மாக கர்த்தருடைய நாமம் தூஷிக்கப்பட நாம் இடம் கொடுக்கக் கூடாது.

சமீபத்தில் பாளையங்கோட்டையில் ஒரு கல்லூரியில் பணியாற்றிய கிறிஸ்தவ பேராசிரியை மரித்ததின் மூலமாக கிறிஸ்தவ மார்க்கத்திற்கு தலைகுனிவும், கர்த்தருடைய நாமம் தூஷிக்கப்படுவதற்கான ஒரு முகாந்தரமும் உண் டானது. இது எவ்வளவு பெரிய வேதனையானது!

இந்தக் கொலை வழக்கில் உட்படுத்தி ஒரு போதகர் அங்கியோடு நின்ற போட்டோ பல பத்திரிகைகளில் வெளிவந்தது கர்த்தருடைய நாமம் தூஷிக்கப்பட ஏது வாயிற்று.

இதனாலே புறஜாதியாருக்குத்தானே பெரிய கொண் டாட்டமாக இருக்கும்! கர்த்தர் நம்மை ஏன் சிருஷ்டித் தார்? ஏன் நமக்காக இரத்தம் சிந்தினார்? ஏன் நம்மை அபிஷேகித்தார்? அவருடைய நாமத்தின் மகிமைக்காக அல்லவா?

முன்மாதிரியான வாழ்க்கை வாழ்ந்து அற்புதங்களி னாலும் அடையாளங்களினாலும் நீ வசனத்தை உறுதிப் படுத்தும்போது கர்த்தருடைய நாமம் மகிமைப்படும்.

''நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தா லும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்'' (1கொரி 10:31).

## மனம்விட்டு உங்களோடே...!

இந்தப் புத்தகத்தின் மூலமாக உங்களைச் சந்திக்க கிருபை செய்த தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். கிருபையும் சமாதானமும் உங்களில் பெருகுவதாக.

இயேசு கிறிஸ்துவை தியானிக்கிற தியானம் நம் உள்ளத்தை பரவசப்படுத்துகிறது. நமக்காக கல்வாரி சிலுவையிலே ஜீவனைக் கொடுத்த அவர் எவ்வளவு நல்லவர்! வானத்தையும் பூமியையும் உண்டாக்கின அவர் எவ்வளவு வல்லமையுள்ளவர்! நல்ல மேய்ப்பராய் நமக்கு முன் செல்கிற அவர், நம்முடைய எல்லாத் தேவைகளுக்கும் போதுமானவராக இருக்கிறார். நம் அருமை ஆண்டவரை நோக்கிப் பாருங்கள். கர்த்தர் நல்லவர், வல்லவர், போதுமானவர் என்று முழு இருதயத்தோடும் முழு பெலத்தோடும் அவரைப் போற்றுங்கள்.

இந்தப் புத்தகத்தை எழுத உற்சாகமாகக் கொடுத்த ஒரு அருமை குடும்பத்தினருக்காக ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். அவர்களுடைய உதவியினாலும், காணிக்கையினாலும் இந்தப் புத்தகம் வெளியிடப்பட ஏதுவாயிற்று. கர்த்தர் சீயோனிலிருந்து அவர்களை ஆசீர்வதிப்பாராக!

Mrs. Stella Walter, Sulur, (C.B.E. Dt).

இந்தப் புத்தகத்தை வாசிக்கிற நீங்கள் ஒருவேளை அன்றன்றுள்ள அப்பம் வாசகராக இல்லாதிருந்தால் தயவு செய்து உடனே உங்களுடைய முழு முகவரியையும் எங்களுக்கு எழுதுங்கள்.

**இந்தப் புத்தகத்திற்கு ஓய்வு தர வேண்டாம். குறைந்தது 50பேருக்காவது வாசிக்கக் கொடுங்கள். நீங்கள் அனுப்பும் காணிக்கை புது புத்தகங்களை மலரச்செய்யும்**

## ஆவிக்குரிய நூல்கள்

ஆவிக்குரிய ஜீவியத்தில் வளருவதற்கும், ஆத்தும பெலன் கொள்வதற்கும் ஆவிக்குரிய நூல்கள் இன்றியமையாதவை.

ஏறக்குறைய 235 க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதிய சகோ. J. சாம் ஜெபத்துரை அவர்கள் இந் நூலையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

பதினைந்து ஆண்டுகள் அரசாங்கத்தில் பணியாற்றிய அவர், தன் வேலையை ராஜினாமா செய்துவிட்டு முழுநேர ஊழியத்தில் 1985 ஆண்டு தீவிரமாக இறங்கினார். வல்லமையான மேடைப் பேச்சிலும் எழுத்து ஊழியத்திலும் ஆயிரக்கணக்கானோரை அவர் கர்த்தருக்குள் வழி நடத்தியிருக்கிறார். இவர் கர்த்தரின் எழுத்தாணி.

புத்தக ஊழியத்தை ஊக்குவியுங்கள். அநேக ஆவிக்குரிய புஸ்தகங்கள் வெளிவர ஜெபியுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

புஸ்தகங்கள் கிடைக்கும் இடம் :
J. சாம்ஜெபத்துரை, M.A.
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு,
கோடம்பாக்கம், சென்னை - 600 024